www.tamilarangam.net

18

ஆக மிக முன்னேறிய தத்துவத்தை வழிகாட்டியாகக்கொண்டுள்ள கட்சி ஒன்றுதான் முன்னணிப் போர்வீரனின் பாத்திரத்தைநிறைவேற்ற முடியும்.

— லெனின்.

ஸ்ரீலங்கா தலைமை அஞ்சலகத்தில் பதிவுபெற்றது

மார்கழி 1982 * 2-வது ஆண்டுச் சிறப்புமலர் மலர் 2 இதழ் 5 * விலை: 1 £

# ஜனநாயகத்துக்கு வெற்றிகிட்டியதா?

ஜனதிபதி தேர்தல் ஒக்டோபர் 20இலும் சர்வ ஜன வாக்கெடுப்பு டிசம்பர் 22இலும் நடந்து முடிந்து விட்டன. 1,48,50,001 பேரில் 81,46,520 பேருக்கு வாக்களிப்பதற்குத் தகுதி இருந்தது. இரண்டு சந்தர்ப்பங்களிலும் ஜயவர்தனவுக்கும், அவரது ஐ. தே. கட்சிக்கும் கூடுதலான மொத்த வாக்குகள் கிடைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த முடிவுகளின் பின் அரசதரப்பிலிருந்து ஜனநாயகத்துக்கு வெற்றிகிட்டிவிட்டதாக வர்ணிப்புகள் நடந்துவருகின்றன. தனியே மொத்த வாக்குத் தொகையை மட்டும் வைத்துக்கொண்டு வெளிவந்த வாய்பேச்சுக்களே இவை. இந்த பேச்சுகளெல்லாம் எவ்வளவு தூரம் உண்மையானவை யென்பது பரிசீலிக்கப்பட வேண்டிய விடயம் மக்கள் வாக்களித்திருக்கும் முறை, அரசாங்கத்தின் போக்கு, எதிரணிகளின் ஆரோக்கியம்-இவைகளே இந்தப் பரிசீலனைக்குரிய பிரதான அணிகலன்கள் இவையே ஜனநாயகத்துக்கும், வெற்றிக்கும் உள்ள உறவை வெளிக்காட்ட உதவுவன.

ஜனதிபதி தேர்தலில் ஜயவர்த்தனவுக்கு விழுந்த வாக்குகளை பெரும்பாலும் முற்றுகவே ஐ. தே. கட்சிக்கு சார்பான வாக்குகளாக எடுக்கமுடியும்.

ஆனல் சர்வசன வாக்கெடுப்பின் பண்பு வேருனது. பாராளுமன்றத்தின் ஆயுளை பொதுத்தேர்தலின்றி 6 வருடங்களுக்கு நீடிப்பது பற்றிய தீர்ப்பே அது. 77-ம் ஆண்டு தேர்தலில் தமது தொகுதியிலிருந்து அனுப்பியவரை நிராகரித்து, அதே நேரம் அவர் சார்ந்த கட்சியை ஆதரிப்போரும் இந்த யோசனைக்கு எதிராக வாக்களிக்க முடியும். இந்த உறுப்பினர் ஐ. தே. கட்சிக்காரராயுமிருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். இதனல் இந்த வாக்களிப்பில் பதவி நீடிப்பு யோசனைக்கு எதிராக விழுந்த வாக்குகளை தனியே ஐ. தே. க. எதிரான வாக்குகளாக கருத முடியாது.

இந்த வேறுபாடுகளினுல் இரண்டு வாக்கெடுப்புகளிலுமிருந்து வந்த முடிவுகள் எல்லாம் ஒரே விதமாக அமைய இடமில்லை. இவற்றில் ஜனதிபதி தேர்தல் முடிவுகள் மூலமே ஐ. தே. கட்சியின் பாதையில் மக்கள் கண்டிருக்கும் நம்பிக்கையையும், அவநம்பிக்கையையும் எடுத்துக்காட்ட முடியும்.

ஒரு தேர்தல் தொகுதியில் செல்லுபடியான வாக்குகளில் 50% இற்கும் அதிகமானவை ஜயவர்தனவிற்கு கிடைத்திருந்தால் அத்தொகுதி ஐ.தே. கட்சியை ஆதரிப்பதாக முடியும்; இவ்வீதத்திலும் குறைவான வாக்குகள் கிடைத்திருந்தால் நிராகரிப்பதாக முடியும்.

ஜனதிபதி தேர்தல் 160 தொகுதிகளில் நடைபெற்றிருக்கின்றது. இவற்றில் 103 தொகுதிகள் ஜயவர்த்தனவை ஆதரித்துள்ளன. 57 தொகுதிகள் நிராகரித்துள்ளன. கொழும்பு மாவட்டத்திலுள்ள 'அவிசாவெல' என்னும்

(தொடர்ச்சி 11-ம் பக்கம்



## மூன்று தலைமுறையின் முடிவில்லாச் சோகம்!

- காடைத்தனம் காட்டி லயன்களிலிருந்து விரட்டியடிக்கப்படுகின்றனர் இங்கு!
- ஆசை வார்த்தைகளை நம்பி நாடுகடந்தவர்களில் 80, 000 இற்கும் அதிகமானேர் பிச்சை எடுக்கிருர்கள்.
- இந்த நிலைமையில் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் 30-10-81 உடன் உயிரிழந்து விட்டது...
- இது மீண்டும் புத்துயிர் பெறும் ஆபத்து...?

''சிங்களஞ் சேர் தென்னுட்டு மக்கள் தீராதி தீரர் என்று ஊது சங்கே'' என்று பாரதிதாசன் பாடினுன். ஆனல் இன்றே அந்தத் தீரர்கள் தமது வாக்குரிமை, வாழும் உரிமை ஆகிய அனைத்தையும் இழந்து விட்ட நிலையில் ''உயிர்ப்பிச்சை'' ''வாழ்வுப்பிச்சை'' கேட்ட வண்ணம் இந்தியாவிற்கு ஓடிவர வேண்டியதாகி விட்டது. 3,75000 பேரைஇவ்வாறு நாடு கடத்தவகைசெய்த சிறிமா-சாத்திரி ஒப்பந்தம் 31-10-81 உடன் உயிரிழந்து விட்டது. மீண்டும் இவ் ஒப்பந்தம் புதுப்பிக்கப்படுமா? என்ற கேள்விகளுக்கான பதில்கள் இன்னமும் மர்மமாகவே இருக்கிறது. இந்த நிலையில் தான் நாடற்றவர்களின் பிரச்சனை குறித்து, கூட்டுச்சேரா நாடுகளின் உச்சி மாநாட்டிற்காக புதுதில்லி வரும் போது, இந்தியத் தலைவர்களுடன் பேசப் போவதாக இலங்கை அறிவித்துள்ளதாகத் தெரிகிறது. எனவே ''தாயகம்'' என நம்பி இந்தியா திரும்பிய மக்களின் இன்னல்கள்-வாழ்க்கை நிலைகள்- அவர்கள் தம் அபிலாசைகள் என்பவற்றை இச் சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்தல் பொருத்தமானதே:

### சிறிமா - சாத்திரி ஒப்பந்தம்

6 இலட்சம் மக்களை இந்தியாவும், 4 இலட்சம் மக்களை இலங்கையும் ஏற்றுக்கொள்வது என்று உடன்பாடு காணப்பட்ட இவ் ஒப்பந்தம் 1968 வரை நடைமுறைக்கு வராமலேயே கிடந்தது. நான்கு ஆண்டுகளின் பின் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டபோது 7 இலட்சம் பேர் இலங்கைக் குடியுரிமைக்கும். 4 இலட்சம் பேர் இந்தியக் குடியுரிமைக்கும் (இயற்கை அதிகரிப்பு உட்பட) விண்ணப்பித்திருந்தனர் என அறிய முடிகின்றது. இதன் மூலம் இந்த நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்ட மக்களில் பெரும்பாலோர் இலங்கையில் வாழ்வதனையே விரும்புகின்றனர் என்பதை எவரும் அறியலாம். ஆனல் வகுப்புவாத வன்செயல்களினுலும், திட்டமிட்ட இனவாதப் போக்கினுலும் பெருமளவு பாதிக்கப்பட்டு தோட்ட லயன்களை (Lines) விட்டு வெளியேறுவதற்கு கட்டாயமாக நிர்ப்பந்திக்கப் படுவோரில் கணிசமான தொகையினர் இந்தியா வந்துசேர விளைக்கின்றனர்.

இப்படியாக இவர்களில் ஏறத்தாழ 90,000 குடும்பங்களைச் சேர்ந்த 3,75,000 பேர் இந்தியாவிற்கு குடிபெயர்க்கப்பட்டு விட்டனர். இவர்களில் பெரும்பான்மையோர் தமிழகத்திலும், ஏனையோர் ஆந்திரா, கேரளா, அந்தமான் போன்ற இடங்களிலும் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

### ஆசை வார்த்தைகளும் அனுபவங்களும்

இங்குவந்துள்ள 95,974குடும்பங்களில் 60,000 குடும்பங்கள் கடன் பெற்று வந்தவை என்பது அவதானிக்கத் தக்கது. கடன் பெற்றவர்களில் அனேகமாக அனைவருமே தமது கடன் பணத்தின் மொத்தத் தொகையையும் பெற முடிவ

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முன்பக்க கருத்துச்
சித்திரச் செய்தி

### அமெரிக்க உதவிகள்

அமெரிக்க ஆயுதங்களும், இராணுவப் பயிற்சிகளும், இராணுவ ஆலோசகர்களும் ஸ்ரீலங்காவிற்கு கிடைக்க இருப்பதாக அறியப்படுகிறது. ஸ்ரீலங்கா தனது பாதுகாப்பிற்காக இவ்வுதவிகள் தேவைப்படுவதாக அமெரிக்காவிடம் கேட்டிருக்கிறதாம். இந்த செய்தியை வாஷிங்டனிலுள்ள தீர்மானம் நிறைவேற்றும் குழுவுடன் நெருங்கிய தொடர்புடைய ஒருவரே தெரிவித்திருப்பதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

ஜனதிபதி தேர்தலில் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன வெற்றி பெற்றுலேயே இது பற்றிய இறுதி முடிவு எடுக்கப்படுமெனவும்கூறப்பட்டிருந்தது.

காலிக்கலவரம்

# 55 வீடுகளுக்கு தீவைப்பு இரு பள்ளிவாசல்கள் நாசம்

1982 யூலை 25ந் திகதி தொடக்கம் காலி மாநகர சபை எல்லைக்குள் நிகழ்ந்த இனக்கலவரத்தில் ஏற்பட்ட உயிர்ச்சேதம், பொருள்சேதம் என்பனபற்றிய விசாரணையை அலெஸ் ஆணைக்குழு நவம்பர் 8ந் திகதி ஆரம்பித்தது.

விசாரணைக்குழு முன் பொலீஸ் தலைமையக ஆணைப் பொலீஸ் இயக்குநர் திரு. ஹேபர்ட் காமினி குணவர்த்தன குறுக்கு விசாரணையின் போது பின்வருமாறு கூறினர்.

வன்செயல் சம்பவங்களில் ஈடுபட்டதாகக் கருதப்படும் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் 135பேர் சிங்களவர், 107 பேர் முஸ்லிம்கள். யூலை 29ந் திகதிய சந்தேகநபர்களை கைதுசெய்ய உத்தரவிட்டேன். யூலை 29ந் திகதி பொலிஸ்மா அதிபரும், இராணுவத்தளபதியும் காலிக்கு வந்தனர். மாநாடு ஒன்று நடத்தப்பட்டது. இந்தமாநாட்டில் கலவரங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் பற்றி ஆலோசிக்கப்பட்டன.

காலி கடைவீதியில் ஓகஸ்ட் முதலாந் திகதிவரை சுமார் 10 கடைகளுக்கு தீ வைக்கப்பட்டிருக்கலாம். யூலை 2 ந் திகதி கடைகளுக்குத் தீ வைக்கப்பட்டது தெரியாது. சில வேளை தீ வைக்கப்பட்டும் இருக்கலாம்.

கொள்ளையடிக்கப்பட்ட பொருட்கள் பல இடங்களிலும் இருந்து கண்டெடுக்கப்பட்டன. ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளையிலும் சில கடைகள் தீக்கிரையாகியிருக்கலாம். சைனு கார்டினிலும், உசனகொடையிலும் இரு முஸ்லிம் பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டன.

மக்கள் பொலிஸ் நிலையம் வந்து முறைப்பாடு செய்வதற்கும் அஞ்சினர். அவர்களின் பயத்தை போக்கு வதற்கு உசனகொடையிலும், தூவவத்தையிலும் இரு பொலிஸ் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதனுல் உசனகொடையிலில் 8 முறைப்பாடுகளும், தூவவத்தையில் 25 முறைப்பாடுகளும் பதியப்பட்டன.

முஸ்லிம் எதிர்ப்பு இயக்கம் (''மரக்கல மர்தனவியாபார'') ஒன்று இருப்பதாக நான் கேள்விப்படவில்லை. அப்படி ஒன்று இயங்குவது சம்பந்தமாக எந்தவொரு முஸ்லிமும் என்னிடம் முறையிடவில்லை.

வன்செயலின்போது 55 வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டன. இவைகளில் அனேகவீடு கள் முஸ்லிம்களுடையவை. சில வீடுகளுக்கு வேண்டுமென்றே தீவைக்கப்பட்டன. தீ பரவியதன் காரணமாக வேறு சில வீடுகளும் தீப்பற்றின என்றும் கூறினர்.

### 'உண்மையும்' (அத்தவும்) 'சுதந்திரனும்' வெளிவரத் தடை!

ஒக்டோபர் 22ந் திகதி 'சுதந்திரன்' பத்திரிகை பிரசுராலயம் பாதுகாப்புப் படையினல் ஒருமாதகாலத்திற்கு சீல்வைக்கப்பட்டது. பின்பு டிசெம்பர் மாத முற்பகுதியில் நான்கு இதழ்கள் வெளிவந்தன அதன் பின்பும் சீல்வைக்கப்பட்டது. இறுதியாகடிசெம்பர் 22ந் திகதி தேர்தல் அன்று 'சுதந்திரன்' இதழ் வெளிவந்தது. புத்தகக்கடைகளிலிருந்து இந்த சுதந்திரன் இதழை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றினர். இவ்விதழின் தலையங்கம் 'வண-சிங்கராயர் சி. ஐ. டியினரால் தாக்கப்பட்டார்' என காணப்பட்டது.

ஜனதிபதி தேர்தலின்பின் நவம்பர் – 2ந் திகதி சீல்வைக்கப்பட்ட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 'அத்த' பத்திரிகை, தொடர்ந்து சீல்வைக்கப்பட்டுள்ளது.

---

ரஷ்யப்புரட்சி —

# ஸ்தாபன அமைப்பு

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

வகையில், களம் புகுந்து போர்புரியும் படையின் ஒரு நடவடிக்கையாக இவர்கள் இப்போது பயங்கரவாதத்தைக் கருதாமல், எந்தப் படையுடனும் தொடர்பற்ற விதத்தில் தனித்துநிற்கும் தாக்குச் செயலாகவே அதனைக் கருதிப் பேசுகிருர்கள். மைய அமைப்பு இல்லாத நிலையில், வட்டாரப்புரட்சி அமைப்புகள் பலவீனமாக இருக்கும் நிலையில், பயங்கரவாதம் இந்தவகையிலே தான் உருவாகும். எனவே தான், தற்போதைய சூழ் நிலையில் இத்தகைய போராட்ட முறை காலத்திற்கு ஒவ்வாததாயும் பொருத்த மற்றதாயும் உள்ளதென்று நாம் உறுதியாகச் சாடுகிறோம். மேலும்இப்போராட்ட முறை தீவிரமாகப் போராடும் வீரர்களின்கவனத்தை, முழு இயக்கத்தின் நலன்களைக் கருதுங்கால் மிக மிக அதிகமான முக்கியத்துவம் வாய்ந்த உண்மைக் கடமையிலிருந்து அப்பால் திருப்புகிறது என்றும், அது அரசாங்கச்சக்திகளை அல்ல புரட்சிச் சக்திகளையே சீர் குலைக்கிறதென்றும் நாம் உறுதியாகப் பிரகடனம் செய்து வருகிறோம்.''

இவ்வாறுகப் பலமுனைகளிலிருந்தும் பிறந்த தவறுனபோக்குகளை லெனின் பக்குவமாக அணுகி புரட்சியாளர்களைப் பயிற்றுவித்தார். ''புரட்சிக்கே தம்மை அர்ப்பணித்துவிட்ட முழு நேரப் புரட்சியாளர்களே ஸ்தாபனத்தின் கரு'' என குறிப்பிட்ட லெனின் பாதுகாப்பை முன்னிட்டு இவ்வபிரிவான தாகவோ பகிரங்கமானதாகவோ இருக்கலாகாதெனவும் கூறினவத்தார். இத்தகைய கருவை உருவாக்குவதில் இவர் ஈடுபட்டார். 1898 மார்ச்மாதத்தில் நிறுவப்பட்ட ரஷ்யசமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியினூடாக தனது பிரச்சாரங்களையும்,வேலைகளையும் முடுக்கிவிட்டார்.

இவ்வகையாக ரஷ்யப்புரட்சிக்கு தயாரிப்பு வேலைகள் நடந்து கொண்டிருந்த போது, சந்தர்ப்ப வாதிகளும் தொழிலாளர் கட்சிக்குள் புகுந்துகொண்டனர். காலம் செல்லச்செல்ல இவர்கள் தமது தன்னிச்சையான போக்கை வெளிக்காட்டத் தொடங்கினர். முதலாளித்துவ வாதிகளின் பிரதிநிதிகளாக விளங்கிய இவர்கள் லெனினது ஆழ்ந்த ஆய்வையும், அதன் பலனுல் வந்த முடிவுகளையும் கணக்கெடுக்காது குறிப்பாக லெனின் மீதே வசைமாரி பொழிந்தனர். லெனினை இவர்கள் பிடிவாதக்காரரென்றும், தலைமைவெறி பிடித்தவரென்றும் பிதற்றித்திரிந்தார்கள். இத்தகைய சந்தர்ப்பவாதிகளின் போக்கைக் கூர்ந்து கவனித்த லெனின் அவர்களின் எதிர்காலத்தை கணித்து ''என்னசெய்ய வேண்டும்'' என்ற நூலில் ''பக்குவமின்மை என்பது என்ன?'' என்று உபதலைப்பிட்டு எழுதியிருந்தார். அவரது கட்டுரையின் சாராம் சப்படி..

அந்தக்காலத்து மாணவர்களும் இளைஞர்களும் மார்க்சியத்தின் பால் அதிக அக்கறை கொண்டிருந்தார்கள். இவர்கள் இயக்கத்தின் பழைய உறுப்பினர்களோடு எதுவித தொடர்புமின்றி தன்னிச்சையாக செயற்படத் தொடங்கினர். உருப்படியான திட்டங்களோ இதர அத்தியாவசிய அமைப்புக்களோ இல்லாது தகுந்த ஆயுதப்பயிற்சிகள் எதுவுமின்றி இவர்கள் போராட்டத்துக்கு கிளம்பியிருந்தனர். மேலும் இவர்கள் தொழிலாளர்களோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு இயங்கத் தொடங்கினர். விரிவானமுறையில் தம்மைப்பிரபல்யப்படுத்தும் பிரச்சாரங்களில் குதித்திருந்தனர். இதனுல் தொழிலாளரிடமிருந்தும் மாணவ, இளைஞர்களிடத்திலிருந்தும் பணத்தையும் வசூலித்துக் கொண்டனர். குழுக்களையும் அமைத்திருந்தனர். துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டு பகிரங்கமாகப்பேசி மக்களைப் போராடும் படி கூவி அழைத்தனர்.

இத்தகைய போக்கைக் கொண்ட மாணவ இளைஞர்களின் அனுபவமற்றதும், பக்குவமற்றதுமான போக்கை லெனின் சுட்டிக்காட்டி இவை எல்லாம் 'முழுமையான தோல்வியில் முடிவதுவழக்கம்' என அறுதியிட்டுக் கூறினர்.

படிப்படியாகத் தம்மைப் பகிரங்கப்படுத்திக் கொண்ட சந்தர்ப்பவாதிகள் 1903 ஆம் ஆண்டு யூலை-ஒகஸ்ட் மாதங்களில் நடந்த சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் மாநாட்டில் தமக்கு 'மென்சுவிக்குகள்' என பெயரிட்டுக் கொண்டனர். இக்கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் –புரட்சிவாதிகள்– தம்மை 'போல்சுவிக்குகள்' எனப் பெயரிட்டுக் கொண்டனர். போல்சுவிக்குகள் லெனினின் கருத்துக்களுடன் ஒருமைப் பட்டவர்களாக இருந்தார்கள். 1912 ஜனவரியில் நடந்த ரஷ்ய சமூக-ஜனநாயக தொழிலாளர் கட்சியின் 6 வது மாநாட்டுடன் போல்சுவிக்குகளுக்கும், மென்சுவிக்குகளுக்கும், இடையிலான தொடர்பு முற்றுகத் துண்டிக்கப்பட்டது.

இம்மாநாட்டிலே இன்றைய சோவியத் யூனியனின் உத்தியோகபூர்வப் பத்திரிகையாக விளங்கும் 'பிராவ்தா'வை வெளியிடுவதென்ற திட்டமும் லெனினுல் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. போல்சுவிக்குகளால் நடாத்தப்பட்ட இந்தப்பத்திரிகையூடாக தொடர்ந்து பல கட்டுரைகளை லெனின் புரட்சித்தயாரிப்பிற்காக வரைந்திருந்தார்.

இத்தகைய பல முனை அனுபவங்களினூடாக வந்த போல்சுவிக் கட்சியினுலேயே ரஷ்ய மக்களின் பூரண விடிவுக்கான புரட்சியை சாதிக்கமுடிந்தது. வன்முறைகளும், பொருளாதார வாதமும், சந்தர்ப்பவாதமும், இதர உதிரி அரைகுறைகளும் மக்களின் உண்மையான பிரச்சனைகளை உணராமல் தம்போக்கில் போய் தம்மைத்தாமே அழித்துக் கொண்டன.

# தமிழுக்குத் தொண்டு செய்தோர் வரிசையில் கைலாசபதி



தமிழ் இலக்கியத் துறையில் பேராசிரியர் கைலாசபதியின் திறமை பிரபலமானது. சிறந்த விமர்சகராயும், (தினகரன்) பத்திரிகை ஆசிரியராயும், ஆய்வாளராயும், விரிவுரையாளராயும் இவர் விளங்கியிருந்தார். இவர் அடியும் முடியும், பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், இரு மகாகவிகள், தமிழ் நாவல் இலக்கியம், ஒப்பியல் இலக்கியமும், சமூகவியலும் இலக்கியமும், இலக்கியமும் திறனுய்வும் போன்ற நூல்களின் ஆசிரியர். அத்துடன் ஏராளமான விமர்சனக் கட்டுரைகளின் ஆசிரியரும் கூட.

பொருளாதாரத் தத்துவத்தின்மேலேயேகலை,இலக்கியம், மொழி, தத்துவம், சமயம் முதலாய மேற்றளங்கள், அதாவது தத்துவ வடிவங்கள் அமைகின்றன, என்னும் நம்பிக்கை இவரிடம் இருந்ததென்பதை 'தமிழர் வாழ்வும் வழிபாடும்' என்ற நூலில் அவர் எழுதிய முகவுரை காட்டி நிற்கிறது. மற்றைய துறைகளைப் போலவே எமது இலக்கிய உலகிலும் மூட நம்பிக்கைகள் நிறைய இருக்கின்றன. விஞ்ஞான நோக்கானும் துணிவுடனும் பிரச்சனைகளை அணுகி யொழிய நாம் முன்னேறப் போவதில்லை என்றும் இவர் இடித்துக் கூறியிருந்தார்.

மகாகவி பாரதியார் பற்றிய ஆராய்ச்சியில் பேராசிரியர் ஈடுபட்டிருந்த காலத்திலேயே அவர் திடீரென நோய்வாய்ப்பட்டிருந்தார். அவரின் கம்பீரமான குரலும், சுறுசுறுப்பான உடலும், இனி நாம் கேட்கவும் காணவும் முடியாவிட்டாலும் அவரது ஆக்கங்களூடாக மீண்டும் அவரை, நாம் எமது மனக்கண் முன் நடமாட வைக்கலாம். இன்னும் பல தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலையில் பேராசிரியரின் இழப்பு பேரிழப்பே!

www.tamilarangam.net



# ரஷ்யப் புரட்சி—

## பயங்கரவாதத்துக்கும் பொருளாதார வாதத்துக்கும் சந்தர்ப்பவாதத்துக்கும் புகட்டுவதென்ன?

1917ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ரஷ்யாவில் ஏற்பட்ட மாபெரும் புரட்சி உலகில் அழியாத ஓரிடத்தைப் பெற்று வருகிறது. இப்புரட்சி போதித்த அனுபவபூர்வமான பாடங்களால் மேலும் பல நாடுகளில் மக்களின் அடிமை விலங்குகள் ஒடிக்கப்பட்டன. இன்றும் ஒடிக்கப்பட்டு வருகின்றன. இதற்கு, ரஷ்யாவில் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வை ஆழ்ந்து அவதானித்து அந்த நோய்க்குரிய பரிகரிப்புகளைச் செய்த போல்சுவிக் கட்சியினது பேராற்றலே உறுதுணையாயிருந்தன. இக்கட்சி தலைவராயிருந்த லெனினது நுட்பம் நிறைந்த அறிவும், திடகாத்திரமான செயற்பாடுகளும் ஈண்டு கவனிக்கத்தக்கவை. அக்காலங்களில் ரஷ்யாவில் வாழ்ந்த மக்களின் விடிவுக்காகவே தாம் போராடுவதாகக் கூறிக்கொண்டு அவற்றிலிருந்து தவறி, தத்தமது சிந்தனைப்பாடுகளுக் கேற்ப செயற்பட்டு வந்த குழுக்களையும், இயக்கங்களையும், கட்சிகளையும் லெனின் வன்மையாகச் சாடினார். இவற்றின் கருத்துக்களையும் செயற்பாடுகளையும் அலசி ஆராய்ந்து, வகைப்படுத்தி 'பயங்கரவாதம்' 'பொருளாதார வாதம்' 'சந்தர்ப்பவாதம்', 'திருத்தல் வாதம்', 'சீர்திருத்தவாதம்' முதலான சொற்களை சூடி, மக்கள் முன் இழுத்துவந்து நிறுத்தினார். இச்சந்தர்ப்பங்களில் தமது கருத்துக்களையும் முன்வைத்தார். இதனாலேயே ரஷ்ய மக்கள் தமது 'நண்பர்கள் யார்?' 'எதிரிகள் யார்?' என்று புரிந்து போராட முடிந்தது.

### ஜாரின் ஆட்சிக்காலத்தில் :

இருபதாம் நூற்றூண்டிற்கு முன்பு ரஷ்யாவில் நிலப்பிரபுத்துவ பண்ணை அடிமை முறை செறிந்திருந்தது. ஜார் என்ற அரச பரம்பரைக்கே அதிகப்படியான நிலங்கள் இருந்தன. ஜாரின் குடும்பமொன்றிடம் மட்டும் இருந்த நிலப்பரப்பு, சுமார் 5,00,000 விவசாயக் குடும்பங்களிடமிருந்த மொத்த நிலப்பரப்பிற்குச் சமனாயிருந்தது. இவற்றைவிட 30,000 நிலப்பிரபுக்களிடம் இருந்த நிலப்பரப்பு சுமார் ஒருகோடி விவசாயக் குடும்பங்களிடம் இருந்த நிலப்பரப்பிற்குச் சமனாக இருந்தது.

இந்த அமைப்பில் ஆட்சி அதிகாரத்தில் இருந்த ஜார் நிறைவேற்று அதிகாரமுடைய தலைவராக இருந்தான். தனதாட்சிக்கேற்ற சட்டங்களை உருவாக்கி இருந்தான். தன்னிச்சையான 'நீதி' யைக் கடைப்பிடித்து வந்தான். தனக்கிசைவான அமைச்சர்களையும், அதிகாரிகளையும், ஆயுதப்படைகளையும் வைத்திருந்தான். தனக்குச் சாதகமான தொடர்புச் சாதனங்களை மட்டும் இயங்க அனுமதித்தான், இவற்றைக்கொண்டு மக்களை மிக மோசமாக அடிமைப்படுத்தி ஆண்டுவந்தான். மக்கள் நிலப்பிரபுக்களின் 'எஸ்ரேற்றுகளி'லும் இதர நிலங்களிலும் பசியாலும், பிணியாலும் வாடி வதைக்கப்பட்டனர்.

20-ம் நூற்றூண்டின் தொடக்கத்தில் ரஷ்யாவில் முதலாளித்துவம் முளைவிடத் தொடங்கியது. பெரும் தொழிற்சாலைகள் எழுந்தன. பாரிய தொழிற்சாலை வலையங்கள் பிறந்தன. இவற்றில் வெளிநாட்டு மூலதனங்கள் முக்கிய பங்கெடுத்துக்கொண்டன. ரஷ்யாவில் கிடைத்த பெருத்த இலாபங்களால் வெளிநாட்டு மூலதனங்கள் மேலும் உட்புகுந்தன. காலப்போக்கில் இவை நிர்வாகத்துறையிலும் தொழிற்துறையிலும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கின. அரசுடனும் மிக நெருங்கிய உறவை உருவாக்கிக்கொண்டன.

இதனால் 20-ம் நூற்றூண்டின் ஆரம்பத்தில் ரஷ்யா முதலாளித்துவ அமைப்பு முறையை பெற்றிருந்தது. ஆயினும் அங்கு நிலப்பிரபுத்துவத்தின் எச்சங்கள் இருந்தமையும் பிரதானமானது. மொத்த சனத்தொகையில 80% மானவர்கள் விவசாயிகளாகவே இருந்தார்கள். கணிசமானளவு தொழிலாளர்களும் இருந்தார்கள். பெரும்பாலான மக்கள் வறுமையில் உழன்று கொண்டிருந்தார்கள்.

நாட்டில் ஏற்பட்டு வந்த பொருளாதார நெருக்கடிகளால் வேலை நிறுத்தங்களும், ஆர்ப்பாட்டங்களும், கிளர்ச்சிகளும், கலகங்களும் ஆங்காங்கே தலையெடுத்திருந்தன. இக்கலகங்களில் ஜாரின் ஆட்சியை எதிர்த்து, மக்களை அடிமை நிலையிலிருந்து மீட்பதை இலட்சியமாகக் கொண்டு பல குழுக்களும், இயக்கங்களும்' கட்சிகளும், இயங்கின. இவற்றில் பல சிறந்த சித்தாந்தத்தையும், முறையான ஆய்வுகளையும், சரியான கருத்துக்களையும் பொருத்தமான செயற்யாடுகளையும் கொண்டிராமல் போனதால், மக்களுக்குப் பயன்படாமல் போயிற்று.

### வன்முறை இயக்கங்கள்:

ஜார் ஆட்சியின் எதேச்சதிகாரப்போக்கில் சிக்குண்டவர்கள் சிலர் வன்முறைகள் மூலம் ஜார் ஆட்சியை கவிழ்க்க முயன்றனர். இவர்கள் ஜார் அரசனையும் அவனது அதிகாரிகளையும் படுகொலை செய்து மக்களுக்கு விடிவைத்தேட முற்பட்டனர். இவர்களின் செயற்பாடுகள் வரிசையில் 1-3-1881 அன்று இரண்டாவது ஜார் மன்னன் அலெக்சாண்டர் படுகொலை செய்யப்பட்டான். இது தொடர்பாக பலர் கைதாகி வழக்குகள் தொடரப்பட்டன. தூக்குத் தண்டனைகளும் வழங்கப்பட்டன.

இத்தகைய வன்முறை இயக்கங்களில் 'நரோத்னயா வோல்யா' (மக்கள் சித்தம்) என்ற இயக்கம் முதன்மையானது. இது ஒரு இரகசிய இயக்கமாக 1879 ஆம் ஆண்டு ஓகஸ்ட்டில் நிறுவப்பட்டது. ரஷ்யாவில் பெரும்பான்மையினர் விவசாயிகளாகையால் விவசாயிகளே பிரதான சக்தி என்றும், முதலாளித்துவம் இன்னும் வளரவில்லை என்றும், இதனால் விவசாயிகளின் கூட்டமைப்பினூடாகவே சோசலிசத்தை எட்ட முடியுமெனவும் கூறினர். மேலும் ரஷ்யாவின் பிரச்சனைகளை ஏனைய நாடுகளுடன் ஒப்பிட முடியாதெனவும், அது தனக்கே உரிய தனிவழியில் தீர்க்கப்படுமெனவும், இங்கு மார்க்சிய போதனைகள் அவசியமற்றவை எனவும் எண்ணங் கொண்டிருந்தனர்.

'நரோத்னயா வோல்யா' உறுப்பினர்கள் வன்முறையில் ஈடுபட்டுக் கொண்டு விவசாயிகள் மட்டத்தில் செல்ல முயன்றனர். ஆனால் பொலிசாரின் தேடுதலுக்கு அகப்படாது, ஒளிந்து இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டமையால் இவர்களின் முயற்சிகள் தோல்வியில் முடிந்தது. பரந்துபட்டு மக்கள் மத்தியில் செல்லமுடியாத நிலை ஏற்பட்டது.

ஆயினும் வன்முறையில் ஈடுபடும் போது வெளிப்பட்ட இவர்களது 'வீரம்' பலரது கவனத்தையும் ஈர்த்திருந்தது. மக்கள் மத்தியில் பிரபலம் பெற்ற இயக்கமாக விளங்கியது.

ரஷ்யாவின் அரசியல் வரலாற்றில் ஆயுதந்தாங்கிய அரசியல் போராட்டத்தின் முக்கியத்துவத்தை இவ்வியக்கம் சுயநலமற்றவர்களையும், வீரம் செறிந்தவர்களையும் பயன்படுத்தி உணர்த்தியிருப்பினும் தவறான கோட்பாடுகளாலும் தவறான போர்த்தந்திரங்களாலும் காலப்போக்கில் அழிந்து போயிற்று. இவர்கள் ரஷ்ய மக்களுக்குப் பயன்படாது போயினர்.

### பொருளாதார வாதிகள் — திருத்தல் வாதிகள் — சீர்திருத்த வாதிகள்

பத்தொன்பதாம் நூற்றூண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றூண்டின் ஆரம்பத்திலும் ரஷ்யாவில் இருந்த ஒரு சாராரை லெனின் 'பொருளாதார வாதிகள்' எனக்குறிப்பிட்டுப் பேசினார். இவர்கள் 'ரபோச்சயா மீசில்' 'ரபோச்சியா தேலோ' என்ற பெயர்களில் செய்திப் பத்திரிகைகளை நடத்தி வந்தார்கள். இவர்கள் முதலாளிகளும், முதலாளித்துவத்துக்கு சார்பானவர்களுமே அரசியல் போராட்டத்தின் பிரதான சக்திகள் என்றுபோதித்தார்கள். இத்தகையவர்களைச் சுற்றியுள்ள பிரச்சனைகளையே முன்வைத்தார்கள். தொழிலாளர்கள் வெறுமனே, கூலி உயர்வுக்காகவும், வேலை வாய்ப்புகளுக்காகவும் மட்டுமே போராடவேண்டுமென பணித்தார்கள். தொழிலாளர்கள் அரசியல் விழிப்புணர்வு பெற்று போராட்டம் செய்வதை தடுக்க முயன்றூர்கள். இவர்களை லெனின் "ஐந்து காசுக்காகப் போராட்டம் நடத்துபவர்கள்" என வர்ணித்தார். இப்பொருளாதார வாதிகளுக்கும் வன்முறை இயக்கங்களுக்குமிடையில் தொடர்பிருந்தது.

இவ்வகைப்பட்ட பொருளாதார வாதிகளுடன் திருத்தல் வாதிகளும் இருந்தார்கள். இவர்கள் மார்க்சியம் பழமையானதென்றும், அதனை மறுபரிசீலனை செய்து இக்காலத்துக்கு ஏற்றதுபோல் திருத்தியமைக்க வேண்டுமெனவும் பிரச்சாரம் செய்தார்கள். லெனின் இவர்களை முதலாளித்துவ பேராசிரியர்களின் வாலைப் பற்றிக்கொண்டு திரிபவர்கள் எனச் சாடினூர்.

திருத்தல் வாதிகளுடன் கூடவே சீர்திருத்த வாதிகளும் இருந்தார்கள் இவர்கள் ரஷ்யாவின் சமூக அமைப்பை மாற்றுமலேயே அதில் சில சீர்திருத்தங்கள் செய்வதனுல் எல்லாம் சரியாகிவிடும் என்றூர்கள்.

இவ்வகையாக வந்த எல்லா வாதிகளும், தமது தவறான சித்தாந்தப் போக்கினுல் ரஷ்யப் புரட்சிக்காலத்தில் செயலிழந்தார்கள். இவர்களால் இம்மக்களின் விடிவுக்கு வழிகாட்ட முடியவில்லை.

### ரஷ்யப் புரட்சிவாதிகள்

வன்முறைகளில் ஈடுபடுபவர்களும், பொருளாதாரவாதிகளும், சீர்திருத்த வாதிகளும் இருந்த ரஷ்யக் களத்திலிருந்துதான், மக்களின் உண்மையான நண்பர்களான புரட்சிவாதிகள் உதித்திருந்தார்கள். இவர்கள் திடீரென பிறந்தவர்களல்லர். ஆழ்ந்த அறிவும், சிறந்த சித்தாந்தமும், தகுந்த திட்டங்களுடனும் படிப்படியாக ஆழ்ந்து போராட்டம் நடாத்தி புரட்சிவாதிகளானூர்கள். இந்த வளர்ச்சிக்கு வழிகாட்டியாக அமைந்தவர்தான் லெனின்.

இவர் ரஷ்யாவின் சமூகச் சூழலை பகுத்தாராய்ந்து முன்னணிப்புரட்சிச்சத்தியைகண்டுகொண்டார். பாட்டாளி வர்க்கத்தை முன்னணிச் சத்தியாக முன்வைத்த இவர் இவ்வர்க்கத்தின் பணிகளை இவ்வாறு எழுதினூர். "எதேச்சதிகார முறையின் எதிர்ப்பைப் பலத்தின் மூலமாக நசுக்கவும், முதலாளி வர்க்கத்தின் தடுமாற்ற நிலையை முடக்கம் செய்துவிட திரளான விவசாயி மக்களுடன் கூட்டணிவகுத்துக்கொண்டு பாட்டாளிவர்க்கம் ஜனநாயகப் புரட்சியை நடத்திமுடிக்க வேண்டும். முதலாளிவர்க்கத்தின் எதிர்ப்பைப் பலத்தின்மூலமாக நசுக்கவும், விவசாயி மக்களின் சிறுமுதலாளி வர்க்கத்தினரின் தடுமாற்ற நிலையை முடக்கம்செய்துவிடவும் மக்களிடையேயுள்ள அரைப் பாட்டாளி வர்க்கத் தன்மையுள்ள பகுதிகளோடு கூட்டணி வகுத்துக்கொண்டு பாட்டாளி வர்க்கம் சோசலிசப் புரட்சியைச் சாதித்து முடிக்க வேண்டும். இவைதான் பாட்டாளிவர்க்கத்தின் பணிகள்."

அவர் இவ்வளவுடன்நின்றுவிடவில்லை. மேலும் ஒருபடி போய் "ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுவதற்கு பாட்டாளி வர்க்கத்திடம் ஸ்தாபனத்தைத் தவிர வேறுஆயுதம்கிடையாது" என்றுகூறி ஸ்தாபனத்தின் அவசியத்தையும் தந்துரைத்தார். ஸ்தாபனத்தைப் பற்றி அவர் தொடர்ந்து குறிப்பிட்டபோது, "முற்போக்குச் சித்தாந்தத்தை வழிகாட்டியாகக் கொண்ட ஸ்தாபனம்தான் முன்னணிப்படை வீரனின் பங்கை ஆற்றமுடியும்" எனக்கூறி சித்தாந்தத்தின் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்தினூர்.

வெறுமனே கருத்துவெளிப்பாட்டுடன் மட்டும் நின்றுவிடாமல் அதனைச் செயலுருவுக்கு கொண்டுவர முனைந்தமையே இங்கு பிரதானமானதாகும். இக்கருத்துக்களும், சித்தாந்தங்களும், இன்னும் பலவும் ரஷ்ய முன்னணித் தொழிலாள விவசாயிகளிடத்தும், புரட்சி மனப்பான்மை கொண்ட அறிவி ஜீவிகளிடத்தும் இரகசிய வகுப்புகள் மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும், துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும் பரப்பப்பட்டன. சித்தாந்த ரீதியில் தெளிவு பெற்று, மக்களின் பிரச்சனைகளை முறையாக அணுகி ஒருமைப்பாட்டுடன் செயற்படத்தக்க முன்னேடிகளை உருவாக்குவதையே இந்த வகைப் பிரச்சாரங்கள் நோக்கமாகக் கொண்டிருந்தன. ஆயினும் அக்காலத்தில் (குறிப்பாக) பிரபலமடைந்திருந்த வன்முறை இயக்கங்களின் நடவடிக்கைகள் மக்களின் கவனத்தை அதிகம் ஈர்த்திருந்தமையால், இந் நோக்கை இலகுவில் நிறைவேற்ற முடியவில்லை. இதனுல் இவ்வியக்கங்களின் வெற்றுத்தனத்தை வெளிக்கொணர வேண்டியநிலைக்கு லெனின் தள்ளப்பட்டார். 'இஸ்க்ரா' என்ற பத்திரிகையில் 1901 ஆம் ஆண்டு மே மாதம் அதன் 4 வது இதழில் இவர் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி "கோட்பாட்டு ரீதியில் நாம் பயங்கரவாதத்தை ஒரு பொழுதும் நிராகரித்ததில்லை; நிராகரிக்க முடியாது. பயங்கரவாதம் என்பது போராட்ட நடவடிக்கை

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இஸ்லாமியரின் கடந்தகால அனுபவங்களென்ன?

இன்று தமிழ் பேசும் மக்கள் பல கூறுகளாகப் பிளவுபட்டிருக்கிறார்கள். இந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர், என மத அடிப்படையில் வேறுபடுத்தப்பட்டிருப்பது ஒருபுறம், இந்தியத் தமிழர், என மலையகத்தில் வசிப்பவர்களை பிரதேச ரீதியில் வேறுபடுததியிருப்பது மறுபுறம். இன்னும் இஸ்லாமியர்களை இலங்கைச் சோனகர், இந்தியச் சோனகர், மலாயர், பாகிஸ்தானியர் என மேலும் பிரித்து விடுகிறார்கள். இவ்வாறாக தமிழ் மொழியைப் பேசுவோரை மதத்தாலோ அல்லது பிரதேசத்தாலோ பாகுபடுத்தி, குழுக்களாக்கி, அக் குழுக்களை தனித்துவமானவர்களாக எண்ணும்படி ஒரு போலி உணர்வு தூண்டப்பட்டு வருவதைக் காண்கிறோம். இத்தகைய சூழ்ச்சிக்குப் பலியாகியுள்ள சிலர் இஸலாமியர்களை தமிழ் பேசும் மக்களிடமிருந்து பிரித்தெடுத்து தனித்துவமான குழுவாக இனங்காட்ட முயற்சிக்கிறார்கள். இவர்கள் எண்ணம் என்னவாக இருந்தாலும் கடந்த காலங்களில் நடைபெற்ற கசப்பான நிகழ்வுகள் இத் தனித்துவத்தை மறுதலிக்கவே செய்கின்றன.

## மொழி, பிரதேச, கலாச்சார ஒற்றுமை

1981-ம் ஆண்டு இலங்கையில் பெறப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி தமிழ் பேசுவோர். 3,757,000 பேர். இவர்களில் வடக்கு, கிழக்குப் பகுதிகளுடன் பதுளை மாவட்டத்தை உட்படுத்திய பிரதேசத்தில் வாழ்பவர்கள் 2,001,749பேர். இவர்களை மதரீதியாக நோக்குமிடத்து இப் பிரதேசத்தில்,

சுமார் 30% இஸ்லாமியர்
சுமார் 51% கத்தோலிக்கரும் கிறிஸ்தவரும்
சுமார் 61% இந்துக்கள்.

கிழக்குமாகாணத்தில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில்தான் கூடுதலான இஸ்லாமியர்கள் வாழுகிறார்கள். இஸ்லாமியர்களில் பெரும்பான்மையினர் விவசாயிகளாகவும், மீனவர்களாகவும், கைத்தொழிலாளராகவும் காணப்படுகின்றனர். கணிசமான தொகையினர் வர்த்தகராயும் இருக்கிறார்கள்.

இஸ்லாமியர்களின் கலாச்சாரத்துக்கும் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், கத்தோலிக்கர்களின் கலாச்சாரத்திற்கும் இடையில் பல பொதுத் தன்மைகள் உண்டு. இன்று நிலவும இஸ்லாமிய திருமணச் சமபிரதாயங்களில் தாலி கட்டல், சீதனமாக பணம், நகை வீடு, வளவு வழங்கல், கூறை உடுத்தல் முதலியவை இடம் பெற்று வருகின்றன மேலும் சந்தணத்திரி கொழுத்துதல், சுபகாரியங்களின் பின் பாற்சோறு சமைத்தல், பால் பொங்குதல் முதலிய கலாச்சாரப் பொதுத் தன்மைகளும் காணப்படுகின்றன.

**அரசாங்கங்கள் தமது விஸ்தரிப்புத் திட்டங்களை தமது உறுப்பினர்களையும் கல்விமான்களையும் கொண்டே தீட்டி வருகின்றன இவற்றை செயற்படுத்த முயலும் போது மக்கள் மத்தியில இருந்து வரும் எதிர்ப்புகளையும், அதனல் விளையும கொந்தளிப்புகளையும், தமது காவல் படையினரைக் கொண்டு அடக்கி ஒடுக்கி விடுகின்றன நீதிமன்றங்களும் கூடவே இவர்களுக்கு பக்கத் துணையாக நிற்கின்றன. புத்தளத்துச் சம்பவங்களும, தீகவாபி புனிதநகர்த்திட்டமும், புதைபொருளாராய்ச்சிப் பகுதியும், இன்னும் பலவும எமக்களித்த அனுபவங்களே இவை.**

இது இவ்வாறிருக்க இந்து, இஸ்லாமிய கிறிஸ்தவ கத்தோலிக்க மதக் கோட்பாடுகளிலும் அவற்றின் நிறுவன அமைப்பிலும் காணப்படும் வேறுபாடுகள் இம் மதங்களைச் சார்ந்தவர்களிடையே படிந்திருப்பது தவிர்க்க முடியாதது. அதாவது மதக் கோட்பாடுகளிலும் நிறுவனத் தன்மையிலும் காணப்படும் தனித்துவம் மக்களிடையேயும் காணப்படும். இஸ்லாமிய மதம் தனது கோட்பாடுகளை நடைமுறைப் படுத்த, கூடுதலான கட்டுப்பாடுகளைக் கொண்ட, நிறுவன அமைப்பைக் கொண்டிருக்கிறது. இதுவே இஸ்லாமியர் மீதான தனித்துவ தோற்றத்துக்கு ஆதாரமாய் விளங்குகிறது.

இவ்வாறு மொழியாலும், கலாச்சாரத்தாலும், பிரதேசத்தாலும் ஒன்றுபட்டு நிற்கும் இஸ்லாமியரையும் ஏனைய இந்து, கிறிஸ்தவ, கத்தோலிக்கரையும் சிலர் அவர்களது மத நெறி சார்ந்த தனித்துவங்களை மிகைப்படுத்தி எத்தர்களின் ஏறுமாறான செயல்களுக்கு வழிவிட்டுக் கொடுத்திருப்பதையே கடந்தகால அனுபவங்கள் புகட்டுகின்றன.

## இஸ்லாமியர் பெற்ற கடந்தகால அனுபவங்கள்

மொழிவாரி இன அடிப்படையில் இலங்கை பிரதான மாக இரண்டு இனங்களை உள்ளடக்கியிருக்கிறது. இவற்றில் பெரும்பான்மையான சிங்களவரின் செல்வாக்கைப் பெற்ற கட்சிகளே ஆட்சிப் பீடமேறி வந்திருக்கின்றன. இவர்களின் செயற்பாடுகள் யாவும் சிங்கள மொழி ஆதிக்கத்தையும் பௌத்தமத விஸ்தரிப்பையும் முதலாளித்துவ பொருளாதார அமைப்பையுமே அடித்தளமாகக் கொண்டிருக்கின்றன. இந்த ஆதிக்க வெறியை, வலப்பன தொகுதியிலிருந்து தெரிவான அரசாங்கக்கட்சி உறுப்பினரான டீ. பி.எம். ஹெரத் 11. 11. 76இல் பாராளுமன்றத்தில் பேசிய பேச்சு நன்கு புரியவைக்கிறது.

**''சிங்களவர்களின் நாட்டில் சிங்களவர்தான் ஆட்சி செய்யமுடியும். தமிழர்களும் முஸ்லிம்களும் சிங்களவர்களுக்கு அடங்கிநடந்து நாங்கள் விரும்பிக் கொடுக்கும் சலுகைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்''.**

சிங்கள ஆதிக்கம் தமிழ் பேசுவோர் மீதுதான் இருக்கிறதென்பதை இரத்தினச் சுருக்கமாக அவர் பேசிய போது. கல்வியமைச்சர் பதவியில் பதியுதீனும், ''முத்திரை'' அமைச்சர் பதவியில் குமாரசூரியரும் இருந்தார்கள்.

ஆளும் கட்சிகள் தமது எண்ண அபிலாசைகளுக்கேற்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதுடன் நின்று விடுவதில்லை. தமது எண்ணங்களை மெருகூட்டி காவிச்செல்லக்கூடிய ''கல்விமான்''களையும் தோற்றுவித்து விடுகின்றன. இங்கிலாந்தில் உயர் கல்வி கற்றுவந்த சிங்களவர் துண்டுப் பிரசுரமொன்றை வெளியிட்டிருந்தார்கள். ஆங்கில மொழியில் வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தின் தமிழாக்கம் இதுதான்;

**''சிங்களம்பேசும் கிறிஸ்தர்வகளுக்கும் முஸ்லிம்களுக்கும் சில ஆலோசனைகள்.**

**நீங்கள் இப்பொழுது உங்கள் மதம் என்று தழுவியிருக்கும் மதமானது அந்நியர் எமது நாட்டை ஆக்கிரமித்திருந்தபோது உங்கள் மூதாதையர் மீது திணிக்கப்பட்டது இன்று நாம் சுதந்திரமானவர்கள். இப்பொழுது நீங்கள் சிந்தித்து பௌத்த சிங்கள இராச்சியத்தை அமைப்பதால்தான் உங்கள் மூதாதயருகு ஆன்மசாந்தி அளிக்கக் கூடும். தூய்மையின்மைக்கு இங்கு இடமில்லை.''**

சிங்கள அரசாங்கங்கள் தமது விஸ்தரிப்புத் திட்டங்களை, தமது உறுப்பினர்களையும் கல்விமான்களையும் கொண்டே தீட்டிவருகின்றன.

**எம். எச். மன்சூர்.**

இவற்றை செயற்படுத்த முயலும்போது மக்கள் மத்தியில் இருந்து வரும் எதிர்ப்புகளையும் அதனல் விளையும் கொந்தளிப்புகளையும் தமது காவற்படையினரைக் கொண்டு அடக்கி ஒடுக்கி விடுகின்றனர். நீதிமன்றங்களும் கூடவே இவர்களுக்கு பக்க துணையாக நிற்கின்றன. புத்தளத்துச் சம்பவங்களும் தீகவாபி புனிதநகர்த் திட்டமும், வாறுறு புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதியும் இன்னும் பலவும் எமக்களித்த அனுபவங்களே இவை.

## புத்தளம் தந்த சம்பவங்கள் எவை?

புத்தளம் பகுதியில் மைலன் குளம், தம்போவை எனும் கிராமங்களுக்கிடைப்பட்ட காணியில் 1973-ம் ஆண்டளவில் சுமார் 25 இஸ்லாமியர் குடியேறி அதனை பயிர்செய்யும் காணியாக மாற்றினர். இக் காணிக்கு அக்காலத்தில் உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு. கோபாலரட்ணம் என்பவர் தற்காலிக உத்தரவுப் பத்திரங்களை வழங்கியிருந்தார். இஸ்லாமியர் இங்கு பயிர் செய்து வருகையில் 1974-ம் ஆண்டளவில் தம்போவை பெரிய குளத்திலிருந்து மைலன் குளத்துக்கு நீர் கொண்டுவரும் திட்டத்தை நீர்ப்பாய்ச்சல் திணைக்களம் ஆரம்பித்திருந்தது.

நீர்ப்பாய்ச்சல் வசதியைக் கண்டோ என்னவோ, இந்தக் காணிக்குள் பல குடிசைகள் ஒருநாள் இரவோடிரவாக முளைத்திருந்தன. அவற்றில் அப்பகுதிக்குப் புதிய தலைகளாகத் தெரிந்த சில சிங்களவர் புகுந்திருந்தனர். இவர்களுக்கு இப்பகுதி காணி அதிகாரி ஒருவரும் நில அளவையாளர் ஒருவரும் உதவிசெய்ததாக அறியப்படுகிறது.

இந்த நடவடிக்கை அக்காணிகளுக்குச் சொந்தமான ஏழை இஸ்லாமியருக்கு ஆத்திரத்தை ஊட்டியது. ஆயினும் சமாதான வழிகளில் இதற்குத் தீர்வுகாண பல வழிகளிலும் முயன்றனர். பலன் ஏதும் கிட்டுவதாக இருக்கவில்லை. இந்நிலையில் திடீரென இனந்தெரியாத சில நபர்களால் குடிசைகளுக்கு தீ வைக்கப்பட்டது. இது பின்னர் வழக்காக்கப்பட்டு இன்றுவரை முடிவுறாமலிருக்கிறது.

**ஏழை விவசாயிகளின் காணியை ஆக்கிரமித்த இந்தச் செய்கையின்பின், புத்தளம் பகுதியில் இஸ்லாமியருக்கும், சிங்களவருக்**குமிடையில் சுமூகமற்றநிலை தோன்றியது.

இதனை அடுத்து 76ம் ஆண்டு தைமாதமளவில், இன்னுமொரு சம்பவமும் இடம் பெற்றது.

புத்தளம் பட்டினத்தில் அமைந்திருந்த பஸ் நிலையத்தைச் சூழ இஸ்லாமியர்களின் பல வியாபார நிலயங்கள் இருந்தன. அப்பகுதி இஸ்லாமியர்களின் செல்வாக்கில் காணப்பட்டது. இந்நிலையில் சிங்கள ஆதிக்கத்தை அப்பகுதியில் நிலை நாட்டுவதற்கு, பஸ் நிலையத்தை புத்தளம் பட்டினத்திலிருந்து ஒருமைல் தொலைவிலுள்ள புகையிரத நிலைத்திற்கு மாற்ற வேண்டியதே ஒரே வழியென்ற கருத்து உருப்பெற்றது. இம்முயற்சியை உத்தியோகபூர்வமாக செயற்படுத்த முனைந்தபொழுது எழுந்த எதிர்ப்புகளால் அம்முயற்சி கைகூடாது போயிற்று. ஆனல், 71ம் ஆண்டு தைமாதம் பஸ் நடத்துனரான சிங்களவர் ஒருவருக்கும், தொழிலாளியான இஸ்லாமியர் ஒருவருக்குமிடையில் நடைபெற்ற கைகலப்பை, தமது அந்தரங்க எண்ணத்துக்கு சாதகமாகப் பயன்படுத்த முற்பட்டது, அரசாங்கம். அதன் விளைவு பஸ் நிலையம், புகையிரத நிலயத்துக்கு அருகில் தற்காலிகமாக இடமாற்றம் பெற்றது. இச் செய்கை அப்பகுதி இஸ்லாமியர்கள் மட்டடத்தில் மனக்கொதிப்பை தோற்றுவித்திருந்தது. புத்தளம் பகுதி முழுவதும் பரபரப்பான சூழ்நிலை கருக் கொண்டது. பஸ் ஒன்றும் எரிக்கப்பட்டது. கலவரத்தை தூண்டும் வகையில் சில வதந்திகள் பரப்பப்பட்டன.

இத்தகைய அமைதி குன்றியவேளையில், 30. 1. 76 அன்று புத்தளம் பெரியபள்ளிவாசலில் நண்பகல் தொழுகை நடைபெற்றுக் கொண்டிருகையில், வீதியின் இருமருங்கிலும் இடப்பட்டிருந்த வாகனத்தடை அறிவித்தல் பலகையை பிடுங்கி எறிந்துவிட்டு அப்பாதையால் உதவிப் பொலிஸ் அதிபர் ஒருவர் வேறுபொலிசாருடன் ஜீப்பில் நுழைந்தார் இந்த அடாவடிச் சேட்டையினல் ஆத்திரமடைந்திருந்த இஸ்லாமியர் பொலிசில் முறைப்பாடிட்டனர். இதனை விசாரிக்க குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இக்குழுவின் தீர்ப்பின்படி பொலிசார் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். அத்துடன் இக்குழுவினரால், சம்பந்தப்பட்ட உதவி பொலிஸ் அதிபரையும், பொலிசாரையும் இடமாற்றம் செய்வதாகவும் உறுதி மொழியும் வழங்கப்பட்டது. ஆனல் நடந்ததோ வேறு. புத்தளத்தில்

(5-ம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இஸ்லாமியரின் - எதிர்காலமென்ன?

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த பௌத்தமத்திய ஸ்தானத்துக்கு பல சிங்களவர் வந்து குவிந்தனர். பஸ்களில் பிரயாணம் செய்த இஸ்லாமியர் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டனர். புத்தளம் முழுவதும் கலவரமடைந்தது.

இவ்வேளை, இப்பகுதியில் ஏற்பட்டுவரும் கொந்தளிப்பு நிலையைப்பற்றி ஆராய்வதற்காக 2. 2. 76 அன்று காலை புத்தளம் முகைதீன் ஜும்மா பள்ளிவாசலில் ஒன்றுகூடினர். இது நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது ஜீப்பில்வந்த காவலர்கள் பள்ளிவாசலைச் சுற்றி வளைத்தனர். துப்பாக்கிகள் இயக்கப்பட்டன. ஐவர் ஸ்தலத்திலேயே வீழ்ந்து மாண்டனர். பதின்மூன்றுபேர் படுகாயமுற்றனர். இவர்களில் மேலும் இருவர் இறந்தனர். மொத்தமாக ஏழுபேரைப் பலி கொண்டது இந்தச்சம்பவம். இதில் நயீமின் என்பவரை குண்டுதுளைத்தபோது பீறிட்ட குருதி, திருக்குர்ரான் வைக்கப்பட்ட கம்பளம் மீது பாய்ந்து ஊறியது. இக்கம்பளம் இன்றும் இப்பள்ளிவாசலில் நினைவுக்காக வைக்கப்பட்டுள்ளது.

புத்தளப் பகுதி பூராகவும் பரவிய இந்தக் கலவரத்தினுல் மொத்தம் ஒன்பது பேர் மாண்டார்கள். இருபள்ளிவாசல்கள் இடிக்கப்பட்டன. சுமார் 270 குடும்பங்கள் வீடிழந்தனர்.

(புத்தளத்தில் இரத்தக்களம் என்ற நூலிலிருந்து பெற்ற தகவல்களே இவை)

இத்தனையும் திட்டமிட்டு நடாததப்பட்ட போது, அரசாங்கத்தில் மந்திரிப் பதவியில் (பதியுதீன் மஹமூத்) இஸ்லாமியப் பிரதிநிதி ஒருவரும் இருந்தார்.

இந்த நேரத்தில் ஒலித்த செல்வநாயகத்தின் குரல் பலரினதும் கவனத்தை ஈர்த்திருந்தது. இந்தச்சம்பவத்தை ஆராய்ந்து இனமேல் நடக்காதபடி ஆவன செய்வதற்காக, ஆணைக்குழு ஒன்றை நியமிக்கும்படி செல்வா கோரினுர்.

அது நடைபெற்றதா? அரசாங்கம், தன் ஆதிக்க வெறிபிடித்த திட்டங்களை செயற்படுத்தும் போது அவைபற்றி விசாரிக்க ஆணைக்குழுக்கள் ஏன்? நீதி விசாரணைகளேன்?

இவ்வளவும் ஸ்ரீமாவோவின் ஆட்சிக்காலத்தில் நடந்து முடிந்தவை. அம்மையாரின் ஆட்சிக்காலத்து அட்டகாசங்களுக்கெல்லாம் ஆணைக்குழு நியமிப்பேனென்று ஜே. ஆர் தேர்தல்காலங்களில் முழங்கியிருந்தார். புத்தளம் சம்பவத்துக்கும் 74 இல் நடைபெற்ற தமிழாராச்சி மாநாட்டின் போது நடந்தவற்றிற்கும் விசாரணைக்குழு நியமிப்பேன் என்ருர். அதிகபலத்துடன் ஆட்சியில் அமர்ந்தார். இதுவரை அப்படி எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை. அவர் இந்த விடயத்தை எடுக்காமைக்குக் காரணமில்லாமலும் இல்லை. சிங்கள ஆதிக்கத்திற்கும், பௌத்தமத விஸ்தரிப்பிற்கும் ஜனுதிபதி ஜயவர்த்தன சளைத்தவரல்லர். இன்று குறிப்பாக புனித நகரத்திட்டம் புதைபொருள் ஆராய்ச்சிப்பகுதி முதலான இன்னும் பலபோர்வையில் இஸ்லாமியர்களையும் தடவிக் குட்டி வருகிருர். தீகவாபியும், வாஞறும் எடுத்துக் காட்டுபவை இவைதான்.

## தீகவாபி புனித பிரதேசத் திட்டத்தில் என்ன நடந்தது?

கடந்த வருடம் கல்முனைப் பகுதியில் பௌத்த கோயில் கட்டுவதற்காக, தீகவாபி புனித பிரதேசத்திட்டம்ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு கல்முனைப் பகுதியில் உள்ள திராய் ஓடை, பொன்னம்வெளி, கொச்சிக்காலந்து நெய்நாக்காடு ஆகிய நெற்பயிர்ச்செய்கை நிலங்கள் இரையாகின. சுமார் ஐம்பது வருடங்களாக இப்பகுதியில் வாழ்ந்துவந்த இஸ்லாமியர் இன்று வீதிக்கு விரட்டப்பட்டுள்ளனர்.

## வாஞறில் நடந்ததென்ன?

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கிண்ணியாவை அண்டியதுதான் வாஞறு குடியேற்றப்பகுதி. இப்பகுதியில் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு முதலில் வந்து குடியேறியவர் ஜனுப் நாகூரான் அப்துல் சத்தார் என்பவர். இவரைத்தொடர்ந்து வேறு இஸ்லாமியரும் வந்து குடியேறினர், இவர்கள் மேட்டுநிலப் பயிர் செய்தும், கோழிவளர்ப்பில் ஈடுபட்டும் வாழ்வைப்போக்கி வந்தார்கள். இங்கு குடியேறியவர்களுக்கு 1971 இல் தற்காலிக காணி உத்தரவுப்பத்திரம் வழங்கப்பட்டது. ஆனுல் அதேநேரம் சில சிங்களவருக்கும் அதே காணிக்கான உத்தரவுப்பத்திரமும் வழங்கப்பட்டிருக்கிறது. ஜனுப் ஜாசின் என்பவர் உத்தரவுப் பத்திரமுடன் வசிக்கும் அவரது காணிக்கு, வேருெரு சிங்களவருக்கும் இதே உத்தரவுப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கிறது.

இது இவ்வாறிருக்க, இவ்வருட முற்பகுதியில் ஒருநாள், இப்பகுதிக்கு முதலில் வந்து குடியேறியவரான அப்துல் சத்தார் வசித்துவந்த காணியை கொழும்பிலிருந்து பிக்குகள் சகிதம் அரசின் உயர் அதிகாரிகள் டார்வையிட வந்தார்கள். அக்காணி புதைபொருள் ஆராய்ச்சிக்காக வேண்டுமெனவும் உடனடியாக காணியை விட்டு வெளியேறுமாறும் பணித்தனர். இப்புதைபொருள் ஆராய்ச்சியின் பின்னணியில் பௌத்தவிகாரை கட்டும் விடயம் புதைந்துள்ளதை புரிந்தோ, புரியாமலோ இதற்கு இசைந்துபோக மறுத்த அப்துல் சத்தார் வழக்கு, ஒன்றைத் தாக்கல்செய்தார். இந்த வழக்கு மின்வேகத்தில் கவனத்திலெடுக்கப்பட்டு, அப்துல் சத்தாரை உடனடியாக வெளியேற்றவேண்டுமென தீர்ப்புக் கூறியது எண்ணற்ற வழக்குகள் நீதிமன்றத்தில் தூங்கிக்கிடக்கையில் இந்த வழக்குமட்டும் மின்வேகததில் எடுக்கப்பட்டதையிட்டு ஆச்சரியப்படக்கூடாது. இத்தீர்ப்பை மீறும்பட்சத்தில் அப்துல் சத்தார் நிச்சயமாக பொலிசாரினுல் பலவந்தமாக காணியை விட்டு விரட்டப்படுவார் என்பது யாவரும் அறிந்ததே.

வழக்கு விடயங்களில் பரீட்சையம் இல்லாதவரான இவரிடம் சென்ற சிலர் சமாதானமாகப் போகும்படியும், வேறுகாணி ஒன்று வழங்கப்படுமெனவும் 'அறிவுரை' வழங்கினர். இவ்வறிவுரையின் தந்திரங்களை புரிந்துகொள்ள முடியாத நிலையில் அவர் வழக்குக் கொப்பியில் கையொப்பமிட்டு விட்டார். இப்பொழுது கையெழுத்திட்டதுதான் தவறென அறிவுரைவழங்கியவர்களும் அவரது ஆட்களும் சொல்லித் திரிகிருர்கள். இப்பொழுது இந்தவிடயம் இழுபறி நிலையில் இருக்கிறது.

இதில் வேடிக்கையான விடயம் என்னவென்ருல், இப்பகுதியின் பாராளுமன்றப் பிரதிநிதி ஆளும் கட்சியைச் சேர்ந்தவராயிருப்பது மட்டுமல்ல (மன்ஞர்ப்பகுதி) மாவட்ட அமைச்சராகவும் வீற்றிருக்கிருர். அவர் தான் திருவாளர் எம்.ஈ.எச் மஹுறூப். இவை எல்லாவற்றிற்கும் மேலாக இஸ்லாமிய விவகார அமைச்சர் ஒருவரும் இருக்கிருர். கௌரவ எம். எச்.மொஹமட்டே அவர், இவர்களுடன் கூடவே வெளிவிவகார அமைச்சராக ஏ.சி.எஸ் ஹமீத்தும், நிதித் திட்டமிடல் பிரதி அமைச்சராக எம்.எச்-எம் நைஞ மரிக்காரும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கிருர்கள்.

இவ்வாறு, புத்தளச் சம்பவங்களும், தீகவாபி, வாஞறு கண்ட சம்பவங்களும் இஸ்லாமியர் மீதான திட்டமிட்ட நடவடிக்கைகளாக அமைவதுடன், 1915-இல் கம்பளையில் ஆரம்பித்து நாட்டின் பல பாகங்களுக்கும் பரவிய கலவரங்களும் 1980—இல் கொம்பனித்தெரு பள்ளிவாசலில் நடைபெற்ற படுகொலைச் சம்பவங்களும் இவ்வாண்டு காலியில் நடைபெற்றவையும் பௌத்தர்களுக்கும் இஸ்லாமியர்களுக்குமிடையிலான சுமூகமற்ற நிலையினை எடுத்துக்காட்டுகின்றன.

## எப்படித் தாக்கப்படுகிருர்கள்?

ஆட்சி செய்வதற்கு தகுதியான கட்சியாக தெரிவு செய்யபபடும் எந்தக்கட்சியும், சிங்கள மொழியையும் பௌத்த மதத்தையும் நாடு பூராகவும், பலாத்காரத்தினுலோ அல்லது தடவிக் குட்டுவதன் மூலமோ விஸ்தரித்து நிலை நாட்டுவதையே கடமையாகக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் இங்கு மொழி அடிப்படையில் சிங்களம்பேசுவோர், தமிழ்பேசுவோர், என இரண்டு சமூகங்கள் வாழும்போது சிங்கள ஆதிக்கத்தை விஸ்தரித்து நிலைநாட்ட தமிழ் பேசுவோரைத் தாக்கி அழித்தொழிக்க வேண்டியது அரசைப் பொறுத் தவரை அவசியமான ஒன்று. இந்த ஆதிக்கக் கைங்காரியத்தை நிறைவேற்றும் போது, கிளம்பும் எதிர்ப்புக்களை, சுலபமாகத் தீர்க்கும் வகையில் அல்லது பலவந்தமாகக் தரை மட்டமாக்கும் வகையில் அரசு வல்லமை பெற்றிருக்க வேண்டும். இதற்கு அரசாங்கம் தன்னைத் தானே தயார்படுத்திக் கொள்ள வேண்டிய நிலக்கும், தமிழ் பேசும் சமூகத்தை — தனது எதிரியை-கூறுபடுத்திப் பலவீனமாக்க வேண்டிய நிலக்கும் தள்ளப்படுகிறது.

தன்னைத்தானே தயார்படுத்தும் போது. முதலில் தனது கட்சிக்கு, பதவியையும், சலுகைகளையும் காட்டி ஆட்சேர்ப்பு நடாத்தும். மதரீதியில் பிரித்துப் பார்த்து இஸ்லாமியரிடமிருந்தும், பிரதேச ரீதியில் பிரித்துப்பார்த்து வடக்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும், மலையகத்திலிருந்தும் ஆட்களைச் சேர்ப்பர். இரண்டாவதாக சட்டங்களையும் நீதியையும் தமக்கேற்ருற்போல் திருத்தியமைப்பர். புனிதநகர்த்திட்டம், குடியேற்றத் திட்டம் என்று நல்ல சொற்களால் போர்த்தி சட்டமாக்குவர். இவை முடிவடைந்திருக்கும் போது அரசாங்கம் என்ன செய்தாலும் அது சரியானதே என நியாயப்படுத்தக்கூடிய 'கல்வி மான்கள்' துளிர்விட்டிருப்பார்கள். இக் கல்விமான்கள் இஸ்லாமியரிடமிருந்தும் பிறப்பார்கள். இறுதியாக பாதுகாப்புப்படைகளையும் ஒரு கணம் பார்த்துக் கொள்வார்கள். இவ்வாருன அமைப்பு முறை முடிவடைந்ததும் அரசு தன்னைத்தானே தயார்படுத்தி விட்டதாகிறது. தகுந்த சந்தர்ப்பம் வரும் போது தனது திட்டங்களை செயலளவிற்கு கொண்டு வந்து நிறைவேற்றி விடுகிறது.

**அரசாங்கத்தின் இந்தச் செயற்பாடுகள் செல்லுபடியவதற்கு தமிழ் பேசுவோரிடையே பல கூறுகள் உட்பூசல்களுடன் இருக்க வேண்டும். அவர்களை மதத்தாலோ, பிரதேசத்தாலோ கூறுபடுத்தி, குழுக்களாக அமைத்து, அக்குழுக்களை தனித்துவமானவர்களாக எண்ணும்படியான பிரச்சாரத்தில் இறங்கி தனக்கு சாதகமான ஒரு புறச்சூழலை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்**

இந்தச் சூழல் இங்கு வகையாக இருக்கிறது. இஸ்லாமியர்களை தனித்துவமானவர்களாக காட்ட முயல்கிருர்கள். மலையக மக்களை தனித்தேசிய இனமாக பிரகடனப்படுத்த பார்க்கிருர்கள். வடக்கு, கிழக்கு கென்று நச்சுப் பிரச்சாரம் செய்கிருர்கள்.

இம் மாதிரியாக அரசாங்கங்கள், தம்மைத் தாமே தயார்படுத்திக் கொண்டும், தமிழ்த்தேசிய இனத்துள் உட்பூசல்களை உருவாக்கி தமக்கு சாதகமான நிலைமைகளைத் தேடிக் கொண்டும், தமிழ் பேசும் மக்களில் இஸ்லாமிய மதம் சார்ந்தவர்களை மட்டும் மிரட்டவில்லை. மலையக மக்களின் வாக்குரிமைகளை பிடுங்கியெடுத்திருப்பதுடன் நாடு கடத்தியும் வருகிருர்கள். அது மட்டுமல்ல, குடியேற்றத்திட்டங்களைக் காட்டி அவர்களைப் பாதிப்படையச் செய்வதுடன் சிங்களவர்களால் சுற்றி வளைக்கப்பட்டு அடிக்கடி தாக்குவதற்கும் துணை போகிருர்கள். கிழக்கு மாகாணத்து இந்து, கிறிஸ்தவர்களுக்கும் இப்படிப் பல அனுபவங்களைக் கொடுத்திருக்கிருர்கள் அவர்கள் வடக்கையும் விட்டு வைக்கவில்லை.

இத்தகைய வெறி பிடித்த நர்த்தனங்களை தமிழ்த் தேசிய இனம் நாடளாவிய ரீதியில் 58லும் 77லுமாக இரண்டு தடவைகள் பாரிய இழப்புகளுடன் சந்தித்திருக்கிறது. ஏனையவற்றைப் பகுதியாக அனுபவித்து வந்தது. இன்றும் அனுபவித்து வருகிறது.

இக் காலங்களில் ஜனநாயகவாதிகளாக தம்மைக் காட்டிக் கொண்டவர்களும், கொள்பவர்களும் அவ்வப்போது அந்தத்தச் சம்பவங்களை மேலோட்டமாகப் பார்த்து விட்டு அறிக்கைகள் விட்டும், ஆணைக்குழுக்களைக் கோரியும், ஆவேசப் பேச்சுக்கள் பேசியும் எதிர்ப்பைக் காட்டி விட்டு அடங்கிவிடுகின்றனர்.

**மொழியாலும், கலாச்சாரத்தாலும், பிரதேசத்தாலும் ஒன்றுபட்டு நிற்கும் தமிழ் பேசும் மக்களில், நடுத்தரவர்க்கத்தாரின் பிரச்சனைகளாக விளங்கும் தரப்படுத்தலையும், அரசாங்க வேலை வாய்ப்பின்மையையும், சிங்கள மொழிப் பிரச்சனையையும் மட்டுமே தீர்ப்பதற்காக 'தமிழீழம்' கேட்கும்காலம் காலாவதியாகி வருகிறது. பதிலாக தமிழ் பேசும் மக்களில் பாமர, தொழிலாள, விவசாயிகளாக விளங்குபவர்களின் பிரச்சனைகளை முன்னெடுத்து அதன் மூலம் கருவெடுக்கும் ஒருங்கிணைப்பில் எழும் எழுச்சியின் மூலமே விடிவை அடைய முடியும், இவ்வெழுச்சிக்கு இஸ்லாமிய தொழிலாளரும், விவசாயிகளும் விதிவிலக்குகளாக முடியாது.**

(தொடர்ச்சி 9-ம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழவர் இடர் தீர...

கடந்தகால இலங்கை அரசியல் வரலாற்றில் தமிழர்களின் 97% தினரின் பிரச்சினையைப் பிரதிபலித்து, அவர்களுடைய தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ளக்கூடிய அரசியல் பிரமுகர்கள் குரல் எழுப்பவில்லை என்பது நிதர்சன உண்மை. அப்படிக் குரல் எழுப்பியிருந்தால் 1949ம் ஆண்டு தமிழ் தொழிலாளர்களின் அரசியல் உரிமை பறிபோனபோது, அத்தலைவர்கள் தமிழ்த் தொழிலாளர்களையும் பாமரர்களையும் ஒன்று திரட்டி ஒரு பெரிய போராட்டம் நடத்தி தமிழர்கள் பிரச்சனையைத் தீர்த்திருக்கலாம். அப்படி நடக்காமைக்குக் காரணம் தமிழர் பிரச்சனை என்னவென்று தீர்க்கமாகச் சிந்திக்கும் திறனும் அதைத்தீர்க்கும் உறுதியான திராணியும் உள்ள தலைவர்கள் இல்லாததே. ஏதோவொரு கஞ்சிவார்க்கும் கருணையுடன் தொண்டுசெய்யும் நோக்குடன் கட்சிகளையும் நிறுவனங்களையும் கட்டி எழுப்பினர். தமிழ் காங்கிரஸ் மலைநாட்டினரை கைவிட்டனர் என்ற காரணத்துடன் ஆரம்பிக்கப்பட்ட தமிழரசுக் கட்சி தமிழ்த் தொழிலாளரின் பிரச்சனையை எந்த விதத்திலும் அணுகவில்லை என்பது உண்மை. அப்படித் தமிழரசுப் பிரமுகர்கள் தமிழ்த் தொழிலாளருடன் இறுகப் பிணைந்திருந்தால் வடகிழக்கு மாகாண மக்கள் நடத்திய போராட்டத்தில் அவர்களும் பங்கு கொண்டிருப்பர். ஆனல் இதுவரை அப்படி எதுவும் நடக்கவில்லை, இதற்குக் காரணம் இத்தலைவர்கள் தம்முடைய பிரச்சனையையும் தம்மைச் சார்ந்த நடுத்தர வர்க்கத்தினுடைய பிரச்சனையையும் அணுகியதே அகும்.

(தர்க்கீகம்–2 இலிருந்து)

## ‘ தமிழீழக் கோரிக்கையின் பின்னணி ’

‘இன ஒடுக்கல்’ கொடுமையால் பாதிக்கப்பட்டு வந்த தமிழ் இனத்தின் இறுதிக்காவலர்களான இளைஞர்களும் மாணவர்களுமே ஈழக்கோரிக்கையை முதலில் எழுப்பினர்கள்.

தமிழ் இளைஞர்களினதும், மாணவர்களினதும் ஈழக்குமுறலுக்கு அப்போதைய அரசியல் பின்னணிக்காரணத்தையும் புரிந்து கொள்ள வேண்டும் இந்தக் காலகட்டத்தில்தான் மேற்கு பாகிஸ்தானின் பொருளாதாரக் கெடுபிடிகளிலிருந்து மீள்பட்டுத், தமக்கென ஒரு “ வங்காள தேசப ” என்ற தேசிய அமைப்பை உருவாக்கிய கிழக்குப் பாகிஸ்தான் மக்களின் அரசியல் போராட்ட வரலாறு, இலங்கை வாழ் தமிழ் இளைஞர்களையும், மாணவர்களையும் மட்டுமன்றி தமிழர்களின் அரசியல் காவலர்களாகிய ஜனநாயக அரசியல் வாதிகளுக்கும் உற்சாகமூட்டியது. இருந்தும் தமிழ் இளைஞர்கள் – முக்கியமாக மாணவர்கள் ஈழக்குரல் கொடுத்தமைக்கு மற்றுமொரு காரணத்தை உணரவேண்டும்.

1965–ம் ஆண்டு முதல் உலக ரீதியில் இளைஞர்களையும், மாணவர்களையும் கவரக்கூடிய விதத்தில் சீனவில் கலாச்சாரப் புரட்சி (Cultural Revolution) ஏற்பட்டது. இதன் தாக்கம் உலக மாணவர்கள் மத்தியிலும் ஏற்பட்டது, பாரிஸ், கலிபோர்னியா, டோக்கியோ, புதுதில்லி போன்ற தலை நகரங்களில் 1968–ம் ஆண்டு மாணவர்கள் ஏற்படுத்திய ஆர்ப்பாட்டங்கள் இதற்கு ஓர் எடுத்துக் காட்டு. இதற்கு இலங்கையிலுள்ள இளைஞர்கள் முக்கியமாகத் தமிழ் இளைஞர்கள் விதிவிலக்காகவில்லை. இந்தக் கால கட்டத்தில் தான் ஈழக்குமுறலும் தலை எடுத்தது. குமுறல் வெடித்துக் கிளம்பும்போது கூக்குரலாக மாறி மக்கள் மத்தியில் பரபரப்பூட்டுவது நியதி வெறும் பரபரப்பு (Spontanitty) ரீதியில் மக்கள் அபிலாசையைப் பெற்று அரசியல் காவலர்களான ஜனநாயகவாதிகள் இந்த மக்கள் பரபரப்பைக் கண்டு பாராமுகமாக இருந்திருக்க முடியாது. இந்தக் காலகட்டத்தில்தான் ஆவரங்கால் மாநாடும், அக்காலகட்டத்துக் கருத்தரங்குகளும் இடம் பெற்றன.

(தர்க்கீகம் – 4இலிருந்து)

## தமிழீழக் கோரிக்கையின் முரண்பாடு

ஒரு இனத்தின் சமூக பொருளியலிலான அரசியல் மேம்பாட்டிற்கு (Social Econ omic and Political Emancipation) அந்த இனத்தின் சமூக அமைப்பில் அடிப்படை மாற்றம் ஏற்படவேண்டும். அந்தமாற்றத்தை ஏற்படுத்துபவர்கள், அந்த இனத்தின் சமூக அமைப்பில் ஒடுக்கப்பட்டு அடித்தளத்தில் வாழும் மக்கள் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தமட்டில் இன்று தேசிய ரீதியிலும் சரி இனரீதியிலும் சரி, அடித்தளத்தில் இருப்பவர்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள். இவர்களை இம்மிகூட இன்றைய தமிழ் ஈழக் கோரிக்கை பிரதிபலிக்கவில்லை. ஆனல் பண்ணைகத்தில் தமிழ் ஈழக் கோரிக்கை பரிணமம் ஆனபோது அதன் கர்த்தாக்களில் ஒருவராயிருந்தவர் சௌமிய மூர்த்தி தொண்டமான். இவர் யூன்று ஏகாதிபத்தியத்தின் கைப் பொம்மையாக விளம்கும் ஸ்ரீலங்காவின் அரசாங்கத்தில் அதுவும் ஈழக் கோரிக்கையை அறவே மறுக்கும் ஆட்சியில் மந்திரியாகவுள்ளார்.

இவரது எண்ணக் கோரிக்கையில் ஈழ அபிலாசை ஈடாட்டம் கண்டு விட்டதால் மலையகமக்களின் முடிவும் அதுவே என்று அர்த்தமா? இல்லை, தமிழ் ஈழப் பிரகடனத்துக்கு சௌ. தொண்டமான் இணைய முன் மலையக மக்களின் மனப்பாங்கை மதிப்பீடு செய்தாரா? அப்படி மதிப்பீடு செய்திருந்தால், ஈழக் கோரிக்கையிலிருந்து பிரிக்க முடியாத ஈழப் பிரதேச எல்லை குறித்து குரல் எழுப்பி அதில் மலையக மக்களின் நிலையென்ன என விளக்கப்பட்டிருக்கும். அப்படி விளக்கப்படாத முரண்பாட்டை ஈழக் கோரிக்கையில் காணக் கூடியதாகவிருக்கிறது.

(தர்க்கீகம் – 3 இலிருந்து)

---

# பாலஸ்தீனர்

★ இவ்வாண்டு யூன் மாத ஆரம்பத்தில் லண்டனில் இருநத இஸ்ரேலிய தூதர் ஸ்லோமோ ஆர்சோ, ஜோர்தானிய மாணவன் ‘கசான் செய்ட்’ (Ghassansaid) இனல் சுட்டுக் காயப்படுத்தப்பட்டார்.

★ இம்மாணவன் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பின்னணியில் செயற்பட்டதாக கூறிக்கொண்டு இஸ்ரேல் யூன் மாதம் 4-ம் 5-ம் திகதிகளில் தென் லெபனனிலுள்ள பாலஸ்தீன இலக்குகள்மீது கடுமையான விமானத் தாக்குதலைத் தொடுத்தது. 15 இடங்கள் தாக்சப்பட்டன. 180 பேர் உயிரிழந்தனர். 450 பேர் காயமடைந்தனர்.

★ இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் பாலஸ்தீன விடுதலை இயக்கம் ‘கற்யூசா’ (Katyusha) என்ற ரொக்கற்றால் இஸ்ரேல் மீது தாக்கியது. இது 25 மைல் தூரம் பாய்ந்து தாக்கக் கூடியது.

★ இதைச் சாட்டாகவைத்து இஸ்ரேலிய பிரதமர் பெகின் தனது அசுரப்படைகளுக்கு இஸ்ரேலின் எல்லையிலிருந்து 25 மைல் தூரத்துக்கு பாலஸ்தீனரை விரட்டியடிக்கும்படி கட்டளையிட்டார். தரை கடல், ஆகாய மார்க்கங்களில் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டன. சுமார் 1500 பாலஸ்தீன வீரரைத்தாக்க 65000 இஸ்ரேலிய இராணுவத்தினரும், 500-க்கு மேற்பட்ட தாங்கிகளும், 100 ஆகாயவிமானங்களும் ஏவிவிடப்பட்டன.

★ எல்லையில் முகாமிட்டிருந்த ஐக்கிய நாடுகள் சபையின் சுமார் 7000 போர் வீரரைக் கொண்ட படைகளை ஒதுக்கித்தள்ளிவிட்டு ரயர், நபரியே நகர்களில் ஊடுருவல்களை முதலில் நடத்தின இந்த ஊடுருவலுடன் மொத்தமாக 300 பேர் மாண்டார்கள்.

★ தொடர்ந்து தாக்குதல்கள் நடந்தன. யூன் 11இல் லெபனனின் தலைநகரும் பாலஸ்தீனரின் பிரதான இடமுமான பெய்ரூட்டில் விமானநிலையம் தாக்கப்பட்டது. இத்தாக்குதலுடன் தமது ‘25மைல் நோக்கம்’ நிறைவேறி விட்டதாகவும், போர் நிறுத்தம் என்பது சிரியாவைப் பொறுத்ததெனவும் இஸ்ரேல் கூறியது.

★ ஆயினும் மத்திய பெய்ரூட்டிலும், தென் பெய்ரூட்டிலும் விமானத்தாக்குதல்கள் தொடர்ந்து நடந்தன. லெபனன் ஜனதிபதி மாளிகையின் மீதும இஸ்ரேலிய போர்விமானங்கள் குண்டு வீசித்தாக்கின.

★ யூன் 12இல் லெபனனின் ¾ பங்கு பகுதி இஸ்ரேலியர் வசமானது. இவ்வேளை போர் நிறுத்தம் செய்வதாக உலக நாடுகளுக்கு இவர்கள் அறிவித்துவிட்டு மத்திய, தெற்கு பெய்ரூட் பகுதிகளில் குண்டுவீசி அவற்றை நிர்மூலமாக்கினர்.

★ பெய்ரூட்டிலிருக்கும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமான பாப்டா மலைபுறத்தில் பலவந்தமாக இஸ்ரேல் இறங்கினர். இதன் மூலம் பெய்ரூட் சுற்றிவளைக்கப்பட்டது. வெளித் தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டன. விமான நிலையமும் இஸ்ரேலியர் வசமானது.

★ பெய்ரூட் தாக்குதல் மூலம், இஸ்ரேலியருக்கு சார்பாக லெபனனில் இருந்த கிறிஸ்தவ படைகளுடன் நேரடியான தொடர்பை இஸ்ரேல் ஏற்படுத்திக் கொண்டது.

★ இஸ்ரேலிய படைகளினல் சுற்றிவளைக்கப்பட்ட பெய்



www.tamilarangam.net





# ஈழக் கோரிக்கை ஏட்டிக்குப் போட்டியல்ல

ஒரு நாட்டை உருவாக்குவது அந்நாட்டின் மக்கள், அவர்கள் தம் உடமைப்பாட்டு உரிமையினை உறுதிப்படுத்தவே ஒரு நாடு கோருகிறார்கள். மொழிவாரி அடிப்படையில் தேசிய அந்தஸ்து உரிமை கோருபவர்களும் உண்டு. ஸ்கொட்லந்து, வேல்ஸ் போன்ற தேசங்கள் மொழிவாரி அடிபபடையில் தேசிய அந்தஸ்து கோருகிறார்கள். இத்தேசங்களில் பேசப்படும் மொழிகள் வேறு நாடுகளில் பேசப்படுவதில்லை, ஆகவே அவர்கள் மொழிவாரி அடிப்படையில் தமது உடமைப்பாடு, உரிமைகள் கோருவது தர்க்கிகம். ஆனால் வேறு எந்த நாட்டிலும் பேசப்படாது இலங்கையில் மட்டும் பேசப்படும் சிங்கள மொழியைப் பேண அம்மொழியின் சூத்திரதாரிகள் மொழிவாரி உடமைப்பாடு கோராமல் தனித் தேசிய உடமைப்பாட்டு ரீதியில் தம் உரிமைகளை உறுதிப்படுத்தி வருவது அவர்கள் தம் அந்தரங்கசூட்சுமமான ஆக்கிரமிப்புத் திட்டத்தையே பட்டவர்த்தனமாகத் தெரியப்படுத்துகின்றது. உண்மையில் அவர்கள் தம் மொழிவாரி அடிப்படையில் உரிமைப்பாட்டை நிரந்தரமாக்க முனைந்திருந்தால் இலங்கைவாழ் மக்கள் பிரச்சனைஎன்றோ தேசிய ரீதியில் தீர்க்கப்பட்டிருக்கும். பதிலுக்கு அவர்கள் வகுத்துவரும் ஒற்றை ஆட்சித் திட்டமும், ஒருமொழிக் கொள்கையும் ஸ்ரீலங்கா சிங்கள நாடு என்பதையும் பகிரங்கப்படுத்துவதிலும் பட்டவர்த்தனமாகிறது. இந்த எதேச்சாதிகார, மிலேசத்தனமான கொள்கையை முறியடிக்கவே ஈழவர் ஈழக்கோரிக்கையைமுன் வைத்து போராடி வருகிறார்கள். இது ஏட்டிக்குப்போட்டியானதல்ல இது இயங்கியல் ரீதியில் ஒரு நாட்டில் ஒரு சமூகத்தில் ஏற்படும் நியதி.

## கூட்டணி தேடும் பரபரப்பு

ஒரு நாட்டில் அல்லது ஒரு சமுதாயத்தில் பூர்சுவா ஜனநாயக வாதிகள் கூடிக் கூட்டணி கட்டுவது உண்டு. அதுபோல் சில நாடுகளில் வலது சாரித் தன்மையுடைய சமூக ஜனநாயக வாதிகளும் கூட்டணி கட்டுவதோடல்லாமல் அர்த்தமற்ற கோரிக்கைகளை முன்வைத்து மக்களின் பரபரப்பை (Spontanity) தூண்டி, அவர்கள் ஆதரவையும் பெறுவார்கள். பின்பு அந்தக் கோரிக்கைகளையும், இலட்சியத்தையும் அடைய வேண்டிய வகைகளையும் வழிகளையும் உருவாக்க முடியாத நிலையில் அவரவர் வாக்க நலன் இடம் தராமையினால் தத்தளிப்பார்கள். அப்போது அர்த்தமற்ற கோரிக்கைகளிலும், அடிப்படையில்லாத பரபரப்பாலும் தூண்டப்பட்ட சில சக்திகள் வன்முறையிலீடுபடுவதும் நியதியே. இந்த வன்முறையையும் பரபரப்பையும் தூண்டிவிடுபவர்கள் வகையாக இதை உபயோகிப்பதும் உண்டு. இங்கு வன்முறையும், பரபரப்பும் பிணைக்கப்பட்ட நிலைப்பாட்டையும், இதற்கும் மக்கள் போராட்டத்துக்கும் உள்ள பாரிய இடைப்பாட்டையும் உணர வேண்டும்.

(தர்க்கிகம் – 9 இலிருந்து)

## அடித்தளச் சூழல்

இருந்தும் கடந்த ஆய்வில் கூறியதுபோல் ஒரு இனத்தின் அடித்தள வர்க்கத்து மக்கள் பாதிக்கப்பட்டபோது குரல் எழுப்பாத அவ்வினத்தின் மேல்மட்டத்தினரும் முன்னோடிகளும் தமக்கும், தம்மவர் சலுகைகளுக்கும் பாதிப்பு ஏற்படும் போது குரலும் கூக்குரலும் எழுப்புவது இயங்கியல் நியதி. ஆனால் இந்தக் கூக்குரலை இயங்கியல் ரீதியில் இதர சாராரின் ஏகோபித்த குரலாகவும் குறிக்கோளாகவும், இலட்சியமாகவும் முழுமை பெறச் செய்ய வேண்டியது தர்க்கிக வாதிகளினுடைய கடமை. ஏனெனில் தத்துவ வித்தகனின் கருத்துப்படி ஒரு சமுதாயத்தின் அல்லது இனத்தின் விமோசனப் போராட்டத்தின் கூர்மைக் கட்டத்தில் அப்போராட்டத்தின் அச்சாணியான பாட்டாளி வர்க்கத்துடன் நடுத்தர வர்க்கத்தவர்கள் இணைவார்கள் என்பதனாலேயே! ஆகவே இன்று உருவாகியுள்ள ஈழக் கோரிக்கையின் குறிக்கோளுக்குரிய இலட்சிய சூழ்நிலைகளை (objective conditions) ஆதாரமாக வைத்து அதற்கு அடித்தள சூழ்நிலைகளை (subjective conditions) முழுமை பெறச் செய்ய வேண்டும் அத்கைய அடித்தள சூழ்நிலைகள் ஈழத்தில் இன்று உருவாகி வருவதை அவதானிக்கலாம்.

(தர்க்கிகம் – 4 இலிருந்து)

## பணிப்பும் விமோசனமும்

ஈழவர் தம் இடர் தீர, ஈண்டு தொலைந்திட இயங்கும் தோழர்கள் இலங்கைவாழ் தமிழர்களின் முற்போக்குச் சக்திகளை அணிதிரட்ட வேண்டும். ஈழவர் சமுதாயத்தின் முதுகெலும்பான பாட்டாளி வர்க்கத் தொழிலாளர்களான மலையகத் தொழிலாளர்களையும், அவர்களுக்கு அனுசரணையாகவும், துணையாகவும் வடக்கிலும், கிழககிலுமுள்ள பாமரர்கள் பங்களிக்க, கொள்கை–கோரிக்கை–இலட்சியம் என்ற அடிப்படையில் அணிவகுக்க வேண்டும் இதை மலையகத் தொழிலாளர்களோ அல்லது வடக்கிலும் கிழக்கிலும் உள்ள விவசாயிகளோ இல்லை நடுத்தர வர்க்கத்தினரோ தாமாக முன்வந்து பங்களிக்க மாட்டார்கள். இந்தப் பங்களிப்பைச் செய்யும் கைங்கரிய பொறுப்பு வடக்குக் கிழக்கிலும் மலையகத்திலுமுள்ள தர்க்கிக வாதிகளின் பொறுப்பே. இதுவே முதல் பணிப்பு.

ஈழம் எமது தாயகம். அதை அமைப்பது எமது ஆதர்ச உரிமை என்ற அடிப்படையில் தர்க்கிகம் தமது பணியைச் செய்யட்டும். சமூக சனநாயக அரசியல் வாதிகளும் தம் பணியைச் செய்யட்டும். தவிர்க்க முடியாத தன்னிச்சைக் காரர்கள் ஓடி ஒழியட்டும். இது திணிப்பல்ல. எமது ஆழ்ந்த பணிப்பு என்பதை ஈழப்போராட்டம் ஈழவர் மததியில் நிரூபித்து, அவர்தம் இலக்கைக் குறிக்கும் செங்கொடியைப் பறக்கச் செய்வார்கள். ஈழவர் இந்த மணியான கொடி பட்டொளி வீசும் போது, தமிழோசை கேட்கும். அதற்காக, பாரதி கூறியதுபோல, ''தாயின் மணிக்கொடி பாரீர்; அதை தாழ்ந்து பணிந்திட வாரீா'' என ஈழவர் திரணடெழுவர். அந்த எழுச்சியின் விடிவே ஈழவர் விமோசனம்.

(இதழ் 12 இலிருந்து)

# பணிவார்களா ?

ரூட் பகுதிகளிலேயே பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் நிர்வாக காரியாலயங்களும், சிறு தொழிற்சாலைகளும், வானொலிநிலையமும் இருந்தன. யூன் 16 வரையில் சுமார் 6,000 பாலஸ்தீனியர் சிறைப்பிடிக்கப்பட்டனர். 30,000 பாலஸ்தீனியர் ஈவிரக்கமின்றிப் படுகொலை செய்யப்பட்டனர்.

★ இஸ்ரேலிய படைகள் தாம் சுற்றிவளைத்திருந்த பாலஸ்தீன முகாம்களுக்கு நீர்விநியோகம், மின் விநியோகம், உணவு விநியோகம் ஆகிய அனைத்தையும் தடைசெய்தன. பாலஸ்தீனவீரர் பெய்ரூட்டை விட்டு எங்காவது போய்விட வேண்டுமென மிரட்டின.

★ இதனைத் தொடர்ந்து சுமார் 10,000 பாலஸ்தீன வீரர் அமெரிக்கா, பிரான்ஸ், இத்தாலி படை வீரர்களின் கண்காணிப்பில் வெளியேறத் தொடங்கினர். இவர்கள் ஜோர்தான், சிரியா, வடஜேமன், தென் ஜேமன், கியூனிசியா ஆகிய இடங்களுக்கு சென்றனர்.

★ இஸ்ரேலின் முற்றுகையின் போதே லெபனான் ஜனாதிபதி எலியஸ் சார்த்கிஸ் இனது பதவிக்காலமும் முடிவுக்கு வந்திருந்தது. இஸ்ரேலியரின் ஈவிரக்கமற்ற மூர்க்கத்தனமான செயற்பாடுகளால் அடுத்த ஜனாதிபதியாக இஸ்ரேலியருக்குச் சார்பான கிறிஸ்தவ வலதுசாரிப்படையின் தலைவர் பசீர் ஜமயல் ஏகமனதாக தெரிவு செய்யப்படும் நிலை உருவானது. இவரை எதிர்த்துக் கேட்க யாரும் முன்வரவில்லை. 23–8–82 அன்று பசீர் ஜமயலே ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

★ ஆனால் இனந்தெரியாத நபர்களினால் புதிய ஜனாதிபதி ஜமயல் கொலை செய்யப்பட்டார்.

★ இந்தக் கொலை குற்றத்தை பாலஸ்தீனர் மீது சுமத்திய ஜமயலின் வலது சாரிப்படைகள், பாலஸ்தீனரைப் பழிவாங்கத் திட்டம் தீட்டின.

★ இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த பாலஸ்தீன அகதிகள் முகாம்களுக்குள் இஸ்ரேலிய படையினரின் பெரும் ஆதரவுடன் ஜமயலின் படைகள் நுழைந்து கொண்டன. 48மணி நேரம் அகதிகள் முகாமில் வெடி ஓசைகளும், மரண ஓலங்களும் தொடர்ந்து கேட்டன. பாலஸ்தீன வீரர்கள் வெளியேற்றப்பட்ட நிலையில் ஆயுதமற்ற அப்பாவிகள் இருந்த அகதிகள் முகாமில், படுகொலைகளும், கற்பழிப்புகளும், பேரழிவுகளும் இடம் பெற்றன. 3,200பேர் கொன்று குவிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் பற்றி பாலஸ்தீன விடுதலை இயக்க பேச்சாளர் அப்துல்லா பிராங்கி இவ்வாறு கூறினார்.

"படுகொலைக்கான நேரங்கள் வகுக்கபபட்டு திட்டமிட்டபடி நடாத்தப்பட்டிருக்கின்றன. சம்பவத்தின் போது இஸ்ரேலியர்கள் இரண்டுமுகாம்களையும் சூழ, தடை விதித்தார்கள். சூழவுள்ள பகுதிகளில் ஊரடங்குச்சட்டத்தைப் பிறப்பித்தார்கள் டிரக், புல்டோசர்கள் கொண்டுவந்து குவித்தார்கள். குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் தோழிகள் [illegible] கள் என்று கண்ணில் பட்ட எல்லாவற்றையும் சுட்டுத் தள்ளினார்கள்''

★ போர் தொடங்கியதிலிருந்து இதுவரையில்சுமார் 78,000பாலஸ்தீனர் கொலை செய்யப்பட்டுள்ளதாக யசீர் அரபாத் தெரிவித்துள்ளார்.

★ இத்தகைய காட்டுமிராண்டிப் படையெடுப்பை இஸ்ரேல் செய்துகொண்டிருந்தபோது ஐக்கியநாடுகள் சபையிலிருந்து இஸ்ரேலை நீக்குவது பற்றி ஆலோசிக்கப்பட்டது. இதற்கு அமெரிக்கா இஸ்ரேல் விலக்கப்படுமானால் தாமும் ஐக்கியநாடுகள் சபையிலிருந்து விலகிவிடவேண்டிவருமென மிரட்டியது இம்மிரட்டலில் அடிபணிந்த ஐக்கியநாடுகள் சபை இம்முயற்சியை பிசுபிசுக்கச் செய்தது.

★ இதுடன் ஐ. நா. சபையில் இரண்டுபிரேரணை சோவியத்யூனியனால் கொண்டுவரப்பட்டது.

அமெரிக்கா இஸ்ரேலுக்கு வழங்கும் சகல போர்க்கருவி உதவிகளையும், இராணுவ உதவிகளையும் முற்றாக நிறுத்திக்கொள்ள வேண்டுமென பிரேரணை ஒன்றும் கொண்டுவரப்பட்டது. இப்பிரேரணையில் எல்லா நாடுகளும் ஒருபுறம் நிற்க. அமெரிக்காவும். இஸ்ரேலுமே மறுபக்கம் நின்றது அத்துடன் அமெரிக்கா தனது இரத்துச் செய்யும் உரிமையை (விட்டோ) பாவித்து இப்பிரேரணையையே தூக்கி எறிந்தது. இதன்மூலம் மக்களைப் படுகொலை செய்பவர்களுக்கும், கற்பழிப்பவர்களுக்கும், ஊனமாக்குபவர்களுக்கும், பிரதேசங்களை ஆக்கிரமித்து மனித இனங்களை ஒழித்துக்கட்டுபவர்களுக்கும் தான் என்றும் இதயபூர்வமாக, தன்உயிரை ஈந்தும் உதவி செய்வேனென உலக நாடுகளுக்கு அமெரிக்கா எடுத்துக்காட்டியது.

இவ்வாறு அமெரிக்கப் பின்னணியில் இஸ்ரேல் மூர்க்கமுடன் பெய்ரூட்டில் ஏற்படுத்திய பேரழிவுகளைத் தொகுத்துப்பார்க்கும் போது ஏதோ தேவையின் நிமித்தமே திட்டமிட்டு செய்யப்பட்டிருப்பதை ஊகிக்கலாம்.

1. லெபனானின் மீதிருந்த இஸ்ரேலின் ஆகாய ஆதிக்கம் சிரியாவிடமிருந்த ஏவு

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

www.tamilarangam.net



# யாழ். குடாநாடு - ஒரு வரலாற்றறிமுகம்

யாழ்ப்பாணக் குடா நாட்டின் வரலாற்று ஆய்வுகள் இன்னும் சிறப்பாகவும் முழுமையாகவும் செய்யப்படாமையினால்; இதன் வரலாறு திட்ட வட்டமானதாகவும், தெளிவானதாகவும் வெளிக்கொணரப்படவில்லை. இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வு முயற்சிகளோடு ஒப்பிடும்போது இப்பிரதேசத்தின் ஆய்வுகளின் அவசியத்தையும் தேவையையும் உணரக் கூடியதாக உள்ளது. ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் வரலாற்றுத் தனித்துவங்கள் பேணப்படுவதும்; அவை திரிபுபடுத்தப்படாதவாறு பாதுகாத்துக் கொள்ளப்பட வேண்டியதும் வரலாற்றுய்வாளர்களின் கடமை ஆகும்.

யாழ்ப்பாணக் குடாநாடு ஒரு நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டது. இலங்கையின் ஏனைய பிரதேசங்களின் வரலாற்று ஓட்டத்தில் இணைத்துக்கொண்டபோதிலும்; இதன் புவிசார் அம்சங்களும்; மொழிரீதியான மக்கள் குழுக்களின் வேறுபாடும் இதன் வரலாற்றுத் தனித்துவங்களை ஏற்படுத்தக் காரணங்களாயின.

இலங்கையின் புராதன வரலாற்றைக் கூறும் பாளி இலக்கியங்களான தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் என்பவற்றோடு தமிழில் எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபவ மாலை, முதலியவற்றிலும், யாழ்ப்பாணம் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. இவ்விலக்கியங்களை வரலாற்று ஆதாரங்களாகக் கொள்வதில் மிகக்கவனம் செலுத்தப்படல் வேண்டும். பாளி இலக்கியங்களில்; அநுராதபுரம், பொலனறுவையில் ஆட்சிசெய்த அரசர்கள் யாழ்ப்பாணத்துடன் தொடர்பு கொண்ட காலங்களில் மட்டுமே, யாழ்ப்பாணத்தைப்பற்றிய குறிப்புகள் வருகின்றன.

கி. மு 482 இல் விஜயனும் அவனது தோழர்களும் மேற்கொண்ட குடியேற்றத்தோடு இலங்கையின் வரலாறு தோற்றம் பெறுகின்றது; என மகாவம்சம் கூறமுற்படுகின்றது. இவ்விலக்கியங்களினூடாக விஜயன் காலத்தில் நாகர், இயக்கர், என்ற மனித குழுக்கள் வாழ்ந்ததாகக் கூறப்படுகின்றது. வட இலங்கையில் நாக இராச்சியம் இருந்ததாகவும் கூறுகின்றது. இவர்கள் பின்தங்கிய மக்களாகவே வாழ்ந்துள்ளனர். இலங்கை இந்தியாவிலிருந்து நீரால் பிரிக்கப்படுவதற்கு முன்னரே, தென்னிந்தியாவிலிருந்து கால்நடையாக வந்திருக்க வேண்டும் எனவும், இவர்கள் ஆதித்திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் கொள்ள

யாழ் - குடாநாட்டின் தொல்பொருள் தளங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் யாழ்ப்பாணக் குடா நாட்டின் பழைமையினை எடுத்துக் காட்டியுள்ளன. இப்பிராந்தியத்தின் பழங்குடிகள் தென்னிந்தியாவை ஒத்த பெருங்கற்பண்பாட்டிற் குரியவர்களாவர். ஆனைக்கோட்டை, களபூமி போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் இதனை உறுதிப்படுத்தியுள்ளன. தென்னிந்திய பெருங்கற்பண்பாட்டுடன் எனத் திட்டவட்டமாகக் கூறலாம். இதன் தலைநகராக அநுராதபுரமும் பின் பொலனறுவையும் விளங்கியது. கந்தரோடையில் பென்சில்வேணிய அரும்பொருள் சாலையைச் சேர்ந்த தொல்பொருள் ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தென்னிந்தியா (தமிழ்நாடு) அநுராதபுரம் போன்ற இடங்களில் நிலவியதை ஒத்த சமூகப்பண்பாட்டு நிலையே யாழ் - குடா நாட்டிலும் நிலவியது என்பதை எடுத்துக்காட்டியது. சமூகப் காலத்தில் பல நிர்வாக மாற்றங்கள் குறிப்பாகத் தமிழ் நாட்டில் ஏற்பட்டன. இம் மாற்றங்கள் சிறப்பாக உயர் பதவி வகித்த தமிழர்கள் பலரைப் பாதித்தது. இதனால் பதவி துறந்தவர்களும் தமது உதவியாளர்கள், குடிமக்கள் என்போரும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வந்து குடியேறினர். இவர்கள் வேளாள இனத்தைச் சேர்ந்தவர்களாவர். திருநெல்வேலி, மயிலிட்டி, தெல்லிப்பளை, பச்சிலைப்பள்ளி, புலோலி, தொல்

இந்த தன்மையுடைய பண்பாடாக இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் நிலவியது என்ற கருத்துக்களை இது மேலும் வலியுறுத்திய தோடு, யாழ்ப்பாணக் குடா நாட்டு மக்கள் யார், கலாச்சாரம் எத்தகையது என்பது பற்றிய கருத்துக்கள் முன்வைக்கக்கூடிய சாத்தியப்பாடுகளையும் ஏற்படுத்தியுள்ளது. [இவ்வாய்வு அறிக்கைகள் இன்னும் வெளியிடப்படவில்லை]

## குடியேற்றங்களும் தென்னிந்தியத் தொடர்பும்

இலங்கையின் கரையோரங்களில் ஆற்றுக் கரைகளை அண்டிய பகுதிகளில் ஆரம்பக் குடியேற்றங்களை அடையாளங் பண்பாட்டுத் தொடர்புகள் தென்னிந்தியாவிற்கும் யாழ்ப்பாணம் உட்பட இலங்கைக்கும் இடையில் நெருக்கமாக இருந்ததை அவதானிக்கலாம். இலங்கையில் நிலவிய பெருங்கற்பண்பாடு தென்னிந்தியாவோடு கொண்டுள்ள தொடர்பினை மிகத்தெளிவாகவே எடுத்துக் காட்டியுள்ளன. பொம்பரிப்பு, திசமகரகம கதிரைவெளி, வல்லிபுரம், ஆனைக்கோட்டை, களபூமி, கந்தரோடை, அநுராதபுரம் போன்ற தொல்பொருள் தளங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவுகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

கி பி 11-ம் நூற்றுண்டு முதல் 13-ம் நூற்றுண்டுவரை பொலனறுவை இலங்கையின் புரம், கோயில்கண்டி, இருபாலை போன்ற இடங்களில் இக்குடியேற்றங்கள் சிறப்பாக நிகழ்ந்தன. குறிப்பாக ஜம்புகோணம், வல்லிபுரம், பூநகரி, ஊர்காவற்றுறை போன்ற துறைமுகங்களினூடாக தென்னிந்திய தொடர்புகள் ஏற்பட்டிருக்கலாம்.

## யாழ்ப்பாண அரசு

புவியியல் ரீதியாக யாழ்ப்பாணப்பகுதி தென்னிந்தியாவுக்கு மிக அண்மையில் இருப்பது இத்தொடர்புகளுக்கு அடிப்படையாகின்றது. 13-ம் நூற்றுண்டில் சோழருக்குப் பின் ஆட்சி பெற்ற பாண்டிய ஆதிக்கம் தென்னிந்தியாவில் வலுவடைந்தது. இக்காலம் இவர்களது படையெடுப்பும்

# அகழ்வாய்வுகள் என்ன கூறுகின்றன?

காட்டியுள்ளனர். கோகண்ண கல்யாணி, மகாதித்த, ரோகண என்ற ஆரம்ப குடியேற்றங்கள் முதலில் தோற்றம் பெற்றதோடு பின் மைய இலங்கையை நோக்கியதாக இக்குடியேற்றம் விரிவடைந்தது. இதனைப்போலவே யாழ்-குடாநாட்டின் கரையோரங்களில் சிறப்பாக வடக்கு, மேற்குக் கரையோரங்களில் ஆரம்பக் குடியேற்றங்கள் நிகழ்ந்து பின் உட்பிரதேசங்களில் மக்களின் பரவல் ஏற்பட்டதாகக் கொள்ளலாம்.

கி. மு 3-ம் நூற்றுண்டளவில் பௌத்தம் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் சமணம், சைவம், ஆஜீவிகம் போன்ற பிற மத வழிபாடுகளும் நிலவியதாகக் கூறப்படுகின்றது. இலங்கையின் வட பகுதியும் கி. பி 11-ம் நூற்றுண்டுவரை; இராஜரட்டை ஆட்சியின் ஒரு பகு தலைநகராக்கப்பட்டது [1017-1215] இக்கால கட்டத்தில் தென்னிந்திய தொடர்புகளுக்கான ஆதாரங்கள் சிறப்பாக வெளிக்கொணரப்பட்டுள்ளன. 10-ம் நூற்றுண்டு சோழரின் எழுச்சியோடு இலங்கை, ஒரு குறிப்பிட்ட நிலப் பிரதேசங்களில் சிதறி வாழ்ந்த தமிழ்மக்கள் ஒரு திட்டவட்டமான குறிப்பிட்ட நிலப்பிரதேசங்களில் நிலையான குடியிருப்புக்களை

**வ. செல்வராஜா**

ஏற்படுத்திய காலகட்டமாக இதனைக் கொள்ளலாம். இக்காலத்தில் பல தமிழ்க் குடியேற்றங்களும் நிகழ்ந்துள்ளன. 1365 இல் மதுரையை ஆண்ட இஸ்லாமியரைக் கலைத்துவிட்டு ஆட்சியைக் கைப் பற்றிய குமாரகம்பண்ணன் இலங்கையில் ஏற்பட்டது. இவர்களுக்கு முன் வந்த கலிங்கமாகனின் (கி. பி 1215 — 1336) படையெடுப்பைத் தொடர்ந்து வட பகுதியில் தனிப்பட்ட அரசு பாண்டியர்களின் ஆதரவுடன் உருவாக்கம் பெற்றது. இதில் தமிழர்கள் பெரும்பான்மையினராக இருந்திருக்கலாம். காலப்போக்கில் இது தனித்துவமான தனி அரசாக உருவாக்கம் பெற்றது. மாகனின் படையெடுப்பின் பின்னர் வடக்கே யாழ்ப்பாண அரசும், வன்னி குறுநில அரசுகளும், தெற்கே தம்பதெனிய அரசும் தோன்றி நிலைபெற்றன.

13-ம் நூற்றுண்டின் பின்னர் இலங்கை அரசின் தலைநகர்கள் தம்பதெனிய (1232 — 1271), யாப்பகூவா (1272 — 1284), குருநாகல் (1293 — 1341), கம்பளை (1342 —

தன. பின் கோட்டை, கண்டி என்ற இரு அரசுகள் தோற்றம் பெற்றன. இவ்வாறான இடப்பெயர்வுகள் ஏற்பட தென்னிந்திய படையெடுப்புகள், உள்நாட்டுப் போர்கள் என்பவற்றால், விவசாய நிலங்கள் குளங்கள் அழிக்கப்பட்டமை, மலேரியா போன்ற நோயின் உக்கிரம் போன்ற தாக்கங்கள் ஈரவலயம் நோக்கிய இடப்பெயர்வுக்கு காரணமாயின. அதேபோல வடக்கு கிழக்கு கரையோரப் பகுதிகளிலும் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இதுவும் யாழ்ப்பாண இலக்கியம் திட்டவட்டமாக உருப்பெற ஒரு காரணமாகலாம். கி பி 13-ம் நூற்றுண்டில் நல்லூரை தலைநகராகக் கொண்டு தோற்றம் பெற்ற யாழ்ப்பாண இராச்சியம் 1618இல் போர்த்துக்கீசர் சங்கிலிமன்னனை தோற்கடிக்கும் வரை சுதந்திரமான அரசாகத்திகழ்ந்தது. திட்டவட்டமான அமைதியான தமிழரின் குடியேற்றம் தமிழ் இராச்சியத்தின் தோற்றத்தின் பின்னரேயே இடம்பெற்றதாகக் கொள்ளப்படுகின்றது.

## குடியேற்றங்களைச் சாத்தியமாக்கியவை

தென்னிந்திய, வட இலங்கைக்கான பண்பாட்டுத் தொடர்புகள், பொருளாதாரத் தொடர்புகள் என்பவைகளை புவிசார் அம்சங்கள் சுலபமாக்கி உள்ளன. தென்னிந்தியாவிற்கு அண்மையில் குடாநாட்டின் வடக்கு, வடமேற்குப் பகுதிகள் காணப்படுகின்றமையாலும் ஆழமற்ற கடற்பகுதிகளைக் கொண்டிருந்தமையாலும்; கடற்பிரயாணத்திற்கேற்ற பருவப்பெயர்ச்சிக் காற்றுக்களின் திசை; உள்வரவு, வெளியேற்றத்திற்குச் சாதகமாக அமைந்துள்ளமையாலும் பரவைக்கடல் போன்றன மீன்பிடித் தொழிலுக்கு வாய்ப்பாக உள்ளமையாலும்; நீண்டகால குடியேற்றத் தொடர்புகளையும், பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் கொண்டதாக யாழ்ப்பாணக் குடாநாடு நிர்மாணம் பெற காரணங்களாயின.

யாழ் குடாநாட்டில் வாழும் மக்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்தேறிய குடிகளே என்பதில் வரலாற்றுய்வாளர்கள் மத்தியில் பலமான கருத்து முரண்பாடுகள் இல்லை. தென்னிந்தியாவிலிருந்து கரையோரங்களில் குடியேற்றம் நிகழ்ந்து பின் உட்புறமாக ஈர்க்கப்பட்டுள்ளனர். குடிநீர் கிடைக்கும் பிரதேசங்களை நோக்கியும், குளம் சார்ந்த வயல்பரப்புகளை நோக்கியும் இப்பரவல் ஏற்பட்டதெனலாம். யாழ்—குடாநாட்டில் காணப்படும் பழம்பெரும் கோயில்கள்- மிகப்பழைய குடியேற்றப்பகுதிகளை நினைவு படுத்துகின்றன. நாகர் கோயில், வல்லிபுரம், மாவிட்டபுரம், நயினுதீவு என்பவற்றைச் சிறப்பான உதாரணங்களாகக் கொள்ள

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## எங்களூர்

# மகிழவட்டவான்

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்குப் பகுதியில் அமைந்துள்ள படுவான் கரையில், மட்டக்களப்பிலிருந்து 22மைல் தூரத்தில் மகிழவட்டான் என்றழைக்கப்படும் எங்கள் கிராமம் அமைந்துள்ளது. இது வடக்கே ஆற்றையும், கிழக்கே கரவெட்டியையும், தெற்கே நெல்விக்காட்டையும், மேற்கே நரிப்புல் தோட்டத்தையும் எல்லையாகக் கொண்டுள்ளது. எமது கிராமம், கல்குடா, தில்லந்தோட்டம், தின்னத்தோட்டம் ஆகிய பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மகிழமரங்கள் இங்கு நிறைந்திருந்தமையால் மகிழவட்டவான் என்று அழைக்கப்பட்டு வருகின்றது. பரந்த வயல் வெளிகளையும், இடையிடையே காடுகளையும் கொண்டுள்ள எமது கிராமம் கிழக்கிலிருந்து மேற்கே உயர்ந்து செல்கிறது.

### மக்களின் வாழ்நிலை....

எமது கிராமத்தில் தமிழ் பேசும் மக்களே வாழ்கின்றனர்கள். இங்கு 280 குடும்பங்கள் உண்டு. சனத்தொகை ஏறக்குறைய 3000 ஆகும். 1978-ம் ஆண்டு கார்த்திகை மாதம் நடந்த சூறாவளியில் பாதிக்கப்பட்ட வீடுகள் பல இன்னும் புனரமைக்கப்படாத நிலையிலேயே உள்ளன. பெரும்பான்மை வீடுகள் மண் வீடுகளாகவே காட்சியளிக்கின்றன. எமது கிராம மக்களின் பிரதான தொழில் வேளாண்மைச் செய்கையாகும். சிலரிடம் மட்டுமே தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான நிலம் உண்டு. பலர் கூலிவேலையையே நம்பிவாழ்கின்றனர். மாரிகாலத்தில் வயல் நிலங்களில் வெள்ளம் பாய்வதால், மாரிப் போகம் அனேகமாக செய்கை பண்ணப்படுவதில்லை. காலபோகம் மட்டுமே செய்கை பண்ணப்பட்டு வருகின்றது. உன்னிச்சைக் குளத்திலிருந்தே இப்போகத்திற்கு நீர் விநியோகிக்கப்படுகின்றது. நீர் பற்றுக்குறைப் பிரச்சினை ஏற்படுவதும் உண்டு.

வேளாண்மைக் காலங்களில் ஓரளவு வசதிபடைத்தவர்களிடம் கூலிவேலை செய்பவர்கள் ஏனைய காலங்களில் சேனைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவர். ஆனி மாதம் முதல் ஆவணி மாதம் வரை தம்முழுநேர உழைப்பையும் சேனை வெட்டுவதில் செலவிடுவார்கள். சேனைப் பயிராக பெரும்பாலும் சோளமும், மரவள்ளியுமே பயிரிடுவார்கள். அதிகமானோர் தங்களின் பொருளாதாரகஷ்டக்களினுல் சோளம் விதைப்புடன் நிறுத்திவிடுவார்கள். அத்துடன் மரவள்ளிக்கு மேலும் பலமாதங்கள் இரவுபகலாக காவல் காக்க வேண்டியும் நேரிடுகிறது. இவ்வளவு சிரமங்களின் பின்பும் குடும்பத்திற்கு தேவையான வருமானத்தை அவர்களால் பெறமுடியாத நிலையே காணப்படுகின்றது. இதற்கு மேலாக வறட்சியும், வியாபாரிகளின் கெடுபிடிகளும் அவர்களை மேலும் வாட்டுகின்றன.

எமது கிராமத்தில் தொழிலாளர்களே அதிகம் இருப்பதால் அவர்களின் கூலி மிகவும் குறைவாகவே இருக்கின்றது. விலைவாசிகள் பெருமளவு உயர்ந்தும், கூலி சிறிதளவே உயர்ந்துள்ளது. இதனுல் கூலி வேலை செய்யவர்களின் வாழ்க்கை மிகவும் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்படுகிறது. அருவி வெட்டும் காலங்களிலும் விதைப்புக் காலங்களிலும் கூடுதலான தொழிலாளர்கள் வேலை செய்ய வருவதால் அவர்களின் கூலி வழமையானதொகையிலிருந்து கிட்டத்தட்ட 150 ரூபாவினுல் குறைவதும் உண்டு. செய்வதற்கு எந்தத் தொழிலுமே கிடைக்காத காலங்களில் தம் குடும்பத்தின் வயிற்றுப் பசி தீர்ப்பதற்காக ஓரளவு வசதி படைத்த நிலச் சொந்தக்காரர்களிடம் மிகச்சிறிதளவு பணத்தைக் கடனுகப் பெற்று, பின்பு அவர்களது கடனைத் தீர்க்க அச்சிறிதளவு பணத்தை கூலியாகக் கொண்டு அருவி வெட்டும் நிலையும் உருவாகின்றது.

இதைத்தவிர சிலர் எமது கிராமத்தின் வடக்கேயுள்ள உப்பு ஆற்றில் மீன் பிடித்து தங்கள் சீவியத்தை போக்குகிறுர்கள். பெரும்பாலும் அவர்களால் 10 ரூபா தொடக்கம், 15ரூபா வரையிலேயேஉழைக்க முடிகிறது. இதன்மூலமே அவர்கள் தங்களின் குடும்ப சீவனப்பாட்டை போக்க வண்டியுள்ளது. சில வேளைகளில் மீன் எதுவும் அகப்படாமல் வெறுங்கையுடன்வீடு திரும்புவதும்உண்டு. இதனுல் ஒரு நேர உணவுமின்றி பட்டினி கிடக்க வேண்டிய நிலைமைகளும் உருவாகின்றன. செய்வதற்கு வேறு தொழில்கள் இல்லாத நிலையில் அவர்கள் தினமும் மீன் பிடிக்கவே செல்ல வேண்டியுள்ளது. இவற்றைவிட விறகுவெட்டி வியாபாரம் செய்கின்றவர்களும், பாய் இழைப்பவர்களுக்கு பன்வெட்டி விற்று சீவியம் நடத்துபவர்களும் இருக்கிறுர்கள். இவை தவிட சிலர் நிரந்தர மற்ற சிறுகூலி வேலைகள் மூலமும், சுயமுயற்சியின் மூலமும் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு கால்வயிறு அரை வயிறு சாப்பாட்டுடன் காலம் தள்ளுகிறுர்கள்.

### பாடசாலைவசதியும் கல்வி நிலையும்

எமதுகிராமத்தில் ஒருதமிழ் கலவன் பாடசாலை உண்டு. தற்போதைய முதலாளித்துவ அமைப்பு முறையின் நிர்வாகச் சீர்கேட்டினுல் இப்பாடசாலையில் ஆசிரியர் பற்றுக்குறை நிலவுகிறது. இப்பாடசாலையில் 600 மாணவர்கள் கல்வி பயிலுகிறுர்கள். இங்கு 1- ம் வகுப்புத்தொடக்கம் 10 -- ம் வகுப்பு வரையுள்ளது. தற்சமயம் கல்வி கற்பிக்க 4 ஆசிரியர்கள் மாத்திரமே உள்ளனர் இதனுல் ஆசிரியர் பற்றுக்குறைவினுல் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்படுகின்றது. மேலும் பொருளாதாரப் பிரச்சனையில் சிக்குண்டு தவிக்கும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப முடியாமல் போகும் நிலையும் ஏற்பட்டிருக்கிறது. பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்களில் கிட்டத்தட்ட 40 வீதமானோர் 5ம் வகுப்புக்கு மேல் தமது கல்வியை தொடரமுடியாத வண்ணம் பொருளாதார நிலை முட்டுக்கட்டை இடுகிறது. இதனுல் நாளைய சமுதாயத்திற்கு வளமூட்ட வேண்டிய பல நூறு மாணவர்களின் கல்வி இடைநடுவில் குழிதோண்டிப் புதைக்கப்படுகிறது. இவ்வாறு கல்வியைப் பெறமுடியாது தடுத்து நிறுத்தப்படும் சிறுவர்கள் தகப்பனுடன் வயல்வேலை ஆடு, மாடு மேய்த்தல், சேனைக் காவல், வயலில் குருவிக் காவல் போன்ற வேலைகளைச் செய்யாவிட்டால் அச்சிறுவர்களின் குடும்பத்தில் பட்டினியே தொடருகிறது. இச்சூழ் நிலையில் எத்தனையோ சிறுவர்கள் அடிப்படைக் கல்வி அறிவு கூட பெறமுடியாமல் தவிக்கின்றுர்கள், இவ்விடர்களையும் தாண்டி கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களும் 22 மைல் தொலைவிலுள்ள மட்டக்களப்புக்குச் சென்று தமது மேற்படிப்பை தொடர முடியாத வண்ணம் அவர்களின் பொருளாதாரப் பிரச்சனை தடுத்து நிறுத்துகிறது.

அடுத்து பேரக்குவரத்து வசதிகளைப் பொறுத்தும் எமது கிராமம் பின்தங்கிய நிலையிலேயே இருக்கிறது. எமது கிராமத்திற்கு ஒரு இ. போ. ச. பஸ்வண்டியே வந்து செல்கிறது. போக்குவரத்து சபையின் ஊழியர் பற்றுக்குறையாலும், மிகப் பழைய பஸ்சையே சேவையில் ஈடுபடுத்துவதாலும், பஸ் வந்து போகும் வீதி புனரமைக்கப் படாமையாலும் இந்த ஒரு பஸ் சேவை கூட ஒழுங்காக நடைபெறுவதில்லை. அனேகமாக அத்தியாவசியப் பொருட்களை வாங்க 18 மைல் தொலைவிலுள்ள ஏறுவூருக்குச் செல்ல வேண்டியுள்ளது, போக்குவரத்து வசதி சீரின்மையால் தமது அத்தியாவசியப் பொருடகளை வாங்கி வருவதற்கு, எமது கிராமமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றுர்கள்.

### இன்றைய சிந்தனை...

எமது கிராமமும் ஏனைய தமிழ்க்கிராமங்கள் போன்று பொருளாதாரரீதியிலும், பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. இவற்றிற்கு காரணம் இன்றைய சமூக அமைப்பும் அதைப் பேணிக்காக்கும் சிங்கள முதலாளித்துவ அரசுமாகும். இன்றைய அரசாங்கத்தின் அடக்குமுறையிலிருந்தும், முதலாளித்துவ சமுதாய அமைப்பின் சீர்கேடுகளிலிருந்தும் எமது மக்கள் விடுதலை பெற இன்றைய சமுதாய அமைப்பை மாற்றி அமைப்பதன் மூலமே முடியும் என இப்போது பலர் சிந்திக்கத் தொடங்கியுள்ளார்கள்.

**வாவா**

# இஸ்லாமியரின்........

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

### தமிழ்த் தலைமை எப்படிப் போயிருக்கிறது

நிலைமை இவ்வாறு மோசமடைந்து வரும் போது தமிழ்த் தலைமை என்ன செய்து வந்ததென்பதையும் நாம் இக்கட்டத்தில் பார்க்க வேண்டும்.

48 இல் தமிழ் பேசும் மக்களின் ஒரு சாராரின் வாக்குரிமை பறிக்கப் பட்டபோது ஜி ஜி யின் தமிழ் காங்கிரஸ் நடந்து சொண்ட விதத்தைக் கண்ட, செல்வநாயகம், அதன் போக்கைப் புரிந்து கொண்டு தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமைக்குக் குந்தகம் ஏற்படா வண்ணம், காங்கிரஸிலிருந்து பிரிந்து தமிழரசுக் கட்சியை கட்டியெழுப்பினுர். ஆனுல் தொடர்ந்து வந்த காலங்களில் மலையக மக்களின் குடியுரிமை பற்றிய பேச்சுக்கள், எதிர்ப்பு நடவடிக்கைகளின் போதும், பண்டா செல்வா ஒப்பந்தத்தின் போதும், முக்கிய இடம் பிடித்து நாளடைவில் முற்றுகக கைவிடப்படும் நிலைக்கு வந்து விட்டது. இறுதியாக 76இல் 'தமிழீழப்' பிரகடனத்தின் போது அதன் முக்கியத்துவத்தையே மறந்து போனுர்கள். மலையக மக்களின் வாக்குரிமை உட்பட இதர அடிப்படைப் பிரச்சனைகளுக்கு முறையான தீர்வைக் கொடுக்க முடியாமல் தத்தளி தார்கள் பிரகடன கர்த்தாக்கள். இதனுல் மலையக மக்களின் அங்கத்துவத்தை இன்று இழந்து நிற்கிறுர்கள். இதன் மூலம் தமிழ் பேசும் மக்களில் ஒரு சாரார் கைவிடப்பட்டு விட்டனர்.

இந்த வகை ஒதுக்கலை தமிழ் பேசும் மக்களின் இன்ஞெரு சாராரான இஸ்லாமியரிடத்திலும் காட்டினுர்கள்- 1956இல் நடைபெற்ற தேர்தலில் (சமஷ்ட்டி கேட்ட காலத்தில்) பொத்துவிலில் முஸ்தபாவையும், கல்முனையில் காரியப்பரையும் தமிழரசுக் கட்சி சார்பில் வெற்றியீட்ட வைத்தனர். 60இல் நடந்த தேர்தல்களில் கல்முனையில் அகமட்டையும், 62 இடைத் தேர்தலிலும், 65 பொதுத்தேர்தலிலும் மூதூரில் முகமட் அலியையும் வெற்றியீட்ட வைத்தனர். ஆனுல் இஸ்லாமியரின் இந்த வகைப் பிரதிநிதித்துவம 70க்குப் பின் முற்றுக அஸ்தமித்து 77இல் புத்தளத்தில் கலாநிதி இலியாசும், கல்முனையில் சம்சுதீனும் ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிட்டபோது, அவர்கள் கூட்டணியுடன் கொண்டிருந்த உறவையும் தட்டிக் கழித்தார்கள்.

மக்களுடைய பாதிப்புகளைப் புரிந்து, அவற்றைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய வழியில் தன்னைக் கொண்டு செலுத்த முடியாத ஒரு அரசியல் கட்சி எப்படி அநேக மக்களின் ஆதரவைப் பெற்று நிலைத்திருக்க முடியும்?

பெரும்பாலானவர்கள் பசியாலும், பட்டினியாலும், வாடிவதங்கி, வாக்குரிமைகளையும் நிலங்களையும் பறிகொடுத்து, நாட்டை விட்டும் நிலத்தை விட்டும் விரட்டியடிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், தரப்படுத்தலையும், வேலைவாய்ப்புப் பிரச்சனையையும் வைத்துப் போராட்டம் நடாத்தும போது எப்படி பெரும்பாலான மக்களின் ஆதரவைத்திரட்ட முடியும்? இவர்கள் முன்வைத்த கோரிக்கைகளின் தன்மையால் தான் தமிழ்த் தலைமை மலையகத்தையும், இஸ்லாமியர்களையும் (கிழக்கையும்) இழந்து. இன்று குடாநாட்டுக் கட்சியாக கணக்கெடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது.

### எதிர்காலமென்ன?

தமிழ் பேசும் மக்களை மதத்தாலும், பிரதேசத்தாலும் பாகுபடுத்தி குத்திக் காட்டுபவர்கள், எமமத்தியிலும் இருக்கிறுர்கள். முதலாளித்துவ சிந்தனை படைத்த இவர்களை 'கிராதர்கள்' என்பர். முதாளிக்கும் அவர்களுக்குத் துணைபோகும் மத்திய தர வர்க்கத்தவருக்கும் வக்காலத்து வாங்குபவர்களே இந்தக் கிராதர்கள். இவர்கள் தம்மால் இயலாதவையெல்லாம் மற்றவர்களாலும் இயலாதவையே என எண்ணுபவர்கள் மலையகத்தை இணைக்க முடியாதென்பார்கள். விரும்பினுல் அவர்கள் வந்து வடக்கிலும் கிழக்கிலும் குடியேறட்டும் என்பார்கள். இஸ்லாமியர் யாரோ என்பார்கள். இவர்கள் பார்வையில் 'தமிழர்' களாகத் தெரிபவர்களில் அநேகர் சிங்களப்பகுதியிலும் வாழ்ந்து வருவதை மறந்து ஏதோ இஸ்லாமியர் மட்டும் சிங்களவர்களுடன் பின்னிப் பிணைந்து வாழ்வதாக கூறிக் கொள்வர். அதனுல் இஸ்லாமியரது நிலைமை வேறு என்பார்கள். அவர்கள் விரும்பினுல் நாங்கள் ஒரு தனியான 'இஸ்லாமிய ஈழம்' அமைத்துக் கொடுப்போம் என்று எடுப்பாகப் பேசுவார்கள்.

சிங்கள அரசாட்சியின் தந்திரங்களையெல்லாம் நாம் புரிந்து கொண்டவர்களென கூறிக்கொண்டு அவர்களது வலையில் வீழ்ந்திருப்பவர்களே இவர்கள். தமது வர்க்கத்தின் —குறிப்பாக மத்திய தர வர்க்கத்தின் தேவைகளுக்காக போராட்டம் நடாத்தப் புறப்படும் இவர்கள் சுயசிந்தனையற்று பரிதாபத்துக்குரிய இந்த நிலைக்குத் தள்ளப்படுவது தவிர்க்கமுடியாததுதான். இதனுல்த் தான் மொழியாலும் கலாச்சாரத்தாலும், பிரதேசத்தாலும் ஒன்றுபட்டு வாழும் தமிழ்பேசும் மக்களில் மத்திய தர வர்க்கத்தாரின் பிரச்சனைகளாக விளங்கும் தரப்படுத்தலையும், வேலைவாய்ப்பின்மையும்' சிங்கள மொழிப் பிரச்சனையையும் தீர்ப்பதற்காக 'தமிழீழம்' கேட்கும் காலம் காலாவதியாகி வருகிறதென்கிறேம். பதிலாக தமிழ் பேசும் மக்களின் பாமர தொழிலாள விவசாயிகளின் ஒருங்கிணைப்பில் அமைந்த எழுச்சி ஒன்றே பூரண விடிவிற்கு வழிவகுக்குமென்கிறேம். இது தாளுகவே எழும்பிவருமென நினைத்து வாழாவிருப்பதல்ல இன்றைய கடமை இந்த எழுச்சிக்குத் துணை போகக் கூடிய அறிவு ஜீவிகளையும். அதன் பயனுல் தோன்றும் முன்னேடிகளையும் உருவாக்க வேண்டியதே இன்றைய கடமையாக அமைகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறுகதை

# இவர்கள் இப்படிக் கேட்கிறார்கள்

சவரின்

அது ஒரு பழமை வாய்ந்த கட்டடம். அந்தக்கிராமத்தில் அனைவருக்கும் மிகவும்தெரிந்த இடமும் கூட. ஓட்டைக்கூரைகளும், இடையிடையே பூச்சு திர்ந்த தூண்களுமே அதன் பிரதான உறுப்புகள்.

அதற்குள் நுழைந்தால் ஆட்டுப்பிழுக்கைகளையும், மாட்டுச்சாணத்தையும் ஆங்காங்கே காணலாம். 'நல்ல' மணத்தையும் உறுஞ்சிக்கொள்ளலாம்.

இந்தக்கட்டடத்தை வெளியூரார் பார்த்து, தவறாக நினைத்து விடக்கூடாதென்பதற்காக பெயர்ப்பலகை ஒன்று மாட்டப்பட்டிருக்கிறது. கறுப்புப்பலகையால் "தமிழ் கலவன் பாடசாலை" என வெள்ளெழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கிறது.

காலையில் இருந்து, சில சிறுவர்கள் அங்குமிங்கும் ஓடிக்கொண்டும், வேறுசிலர் கூடிநின்று கதைத்துக்கொண்டும், இன்னும் ஒரிருவர் துப்பரவு செய்வதில் ஈடுபட்டுக் கொண்டும் இருந்தார்கள். கதிரை, மேசைகள் மிகக்குறைவாக இருந்தமை மாணவரின் இத்தகைய செயல்களுக்கு பேருதவியாய் இருந்தது.

மென்மையான பச்சையும், நீலமும் கொண்ட கோடிட்ட சேட்டை அணிந்திருந்த ஒருவர் 'அதிபர் அலுவலகம்' என எழுதப்பட்டிருந்த சிறு அறையின் வாயிலில் வந்துநின்றார். அவருக்கு வயது நாற்பத்தைந்தைத் தாண்டியிருக்கும். தனது கையை அசைத்து அருகில் நின்ற மாணவனொருவனை அழைத்தார்; ஏதோ சொன்னார். அவர் சொன்னதுதான் தாமதம் நூறுயார் ஓட்டப்போட்டியில் பங்குபற்றுபவனென்ற நினைப்பில் 'விர்' என்று ஓடிச்சென்று, மேசை ஒன்றில் இருந்த ஓர் இரும்புத் துண்டை எடுத்து, தொங்கிக்கொண்டிருந்த புகைவண்டித் தண்டவாளத் துண்டைப் போட்டு அறைந்தான். பாடசாலை ஆரம்பமாவதற்குரிய 'மணி' ஒலித்தது.

* * *

ஐந்து வகுப்பறைகளைக் கொண்ட அந்தப்பாடசாலையில் மூன்று வகுப்பறைகளில் ஆசிரியர்கள் கடமையிலிருந்தார்கள். எப்பொழுதும் ஏதாவது இரண்டு வகுப்புகள் ஆசிரியரில்லாதிருப்பது அங்கு வழக்கமான விடயம்.

'சிவலிங்கம் சேரும்' ஒரு வகுப்பில் அமர்ந்திருந்தார். 'வணக்கம் சேர்' என்ற மாணவரின் ஏகோபித்த குரல் சற்றுநேரத்துக்கு முன்புதான் முற்றாக அடங்கியிருந்தது.

சிவலிங்கம் ஆசிரியர் ஒருதரம் மாணவர்களை உற்றுப் பார்த்துக் கொண்டார். இந்தக்காலங்களில் இவ்வளவு வரவுதன் இருக்குமென்பது அவரது அனுபவ உண்மை. இப்பொழுதே வரவுப்புத்தக வேலையை முடித்துவிட்டால் ஒரு பாரங்குறைந்ததாக இருக்குமென எண்ணிக்கொண்டு அந்தப்புத்தகத்தைப் புரட்டினார். மாணவரை மீண்டுமொருமுறை நன்றாகப் பார்த்துக்கொண்டார். பெயர்கள் எல்லாம் நன்கு பழக்கப்பட்டவை; புத்தகத்தில் பத்து ஒன்றுகளை இடையிடையே குறித்துக் கொண்டார், மீதான இடங்களில் பதினைந்து பூச்சியங்களை இட்டுக் கொண்டார்.

"சேர் வரக்குள்ள குமார் வயலுக்கு அவன்ர அப்பாவோடை போறான். இண்டைக்கு வேளாம வெட்டாம். தான் பள்ளிக்கூடம் வரமாட்டானும்" என்று ஒருவன் கூறினான். "அப்படியெண்டா இந்தமுறையும் அவன் பெயில் தான்" அழகாத் தலை வாரி, கசங்காதசட்டை அணிதிருந்த அந்த மாணவி கூறியதும், அதில் என்னசிரிப்போ தெரியாது எல்லோரும் சிரித்து விட்டார்கள்.

ஆசிரியர் அவற்றை எல்லாம் கவனித்தவராகத் தெரியவில்லை. பேனாவின் பின்பக்கத்தில் இறுக்கியிருந்தமூடியை இழுத்து முன்பக்கம் செருகிவிட்டு மேசையிலிருந்து எழுந்தார்.

"சரி பாடத்தைத் தொடக்குவம்" அயல் அறைகளிலிருந்து வந்தகுரல் ஒலிகளை மீறி சிவலிங்கத்தின் குரல் அந்த வகுப்பறையில் ஒலித்தது.

மாணவர்கள்தம்மை தயார்படுத்திக்கொண்டு நிமிர்ந்திருந்தார்கள். "எங்கே நீ சொல்லு நேற்று தமிழ் மலரில் படிச்ச பாடத்தை" அவள் எழுந்து உரத்தகுரலில் மகிழ்ச்சியுடன் அந்தப்பாடத்தை 'பாடம்' போலச் சொல்லத் தொடங்கினாள்.

"ஒரூரில் ஒரு எசமானர் இருந்தார். அவருக்குப் பல வேலையாட்கள் இருந்தார்தள். ஒருநாள் ஒரு வேலைக்காரன் தனது எஜமானின் கட்டளைப்படி நடக்கவில்லை. இதனால் கோபமடைந்தஎஜமான் அந்த வேலைக்காரனுக்கு அடித்தார். அவன் வலிதாங்க முடியாமல் ஒலமிட்டு அழுதான். இதனைப் பார்த்த எஜமான் மனம் நொந்துகொண்டார்." தான் அவ்வாறு செய்துவிட்டேனென்று எண்ணலானார்..........."

"நிப்பாட்டு........" ஆசியர் இடைமறித்தார்

"எங்க மிச்சத்தை நீ சொல்லு"

அவன் எழுந்தான். மெல்லிய குரலில் பயந்து பயந்து, பாடத்தை ஆசிரியரினது வேண்டுதலுக்காகச் சொல்வதுபோல் சொல்லத்தொடங்கினான்.

"எஜமான் அந்த வேலைக்காரனைஅழைத்துவந்து, 'நான் தவறுசெய்து விட்டேன் நீ எனக்கு தண்டனை தரவேண்டும். என்னுடைய காதைப் பிடித்து உன்னுடைய கைகளால் முறுக்கு' என்று கேட்டுக்கொண்டான். இதற்கு வேலையாள் மறுத்தான் பின் எஜமானின் கட்டாயத்தினால் அவனது காதைப்பிடித்து மெதுவாகமுறுக்கினான். எஜமான் 'நன்றாகமுறுக்கு நன்றாகமுறுக்கு' என்று கத்தினான். அவனால் அப்படிச்செய்ய முடியவில்லை. வேலைக்காரன் அழத்தொடங்கினான். அப்போது எஜமான் தான் இப்பொழுதுதான் அவனுக்கு சரியான தண்டனை கொடுத்திருப்பதாக நினைத்தான். எப்பொழுதும் வேலையாட்கள் எஜமானின் கட்டளைப்படி நடக்கவேண்டும்."

"சரி கெட்டிக்காரப் பிள்ளைகள் இப்படியெல்லோ பாடத்தை ஒவ்வொருநாளும் படிச்சுக்கொண்டு வரவேணும்" ஆசிரியர் உற்சாகமூட்டி விட்டார் அந்தமாணவருக்கு.

"ம்.. இண்டைக்கு தமிழ் மலரிலே பதினைஞ்சாம்பாடத்தைப்படிப்பம். ...... எங்களெல்லாரும் வழக்கமா இருகிற மாதிரி இருங்கோ பாப்பம்......" என்று சொன்னதுதான் தாமதம் மாணவர்கள் முண்டியடித்துக்கொண்டு மூன்றுகுழுக்களாக சேர்ந்தார்கள். ஒவ்வொருகுழுவிடமும் ஒவ்வொரு புத்தகம் இருந்தது. அந்தப் புத்தகங்களைச் சுற்றியே மாணவர்கள் குவிந்திருந்தார்கள். ஆசிரியரும் ஒருகுழுவுடன் தன்னைச்சேர்த்துக் கொண்டார்.

அந்தக்குழுவைச் சேர்ந்த மாணவன், தான் கொண்டு வந்த புத்தக அடுக்கிலிருந்து அந்தப்புத்தகத்தை கவனமாக எடுத்து பேசையில்வைத்தான் வெளிநாட்டுச் சஞ்சிகை ஒன்றின் தாளினால் அது உறை போடப்பட்டிருந்தது. அதில் 'தமிழ் மலா-4' என எழுதப்பட்டிருந்தது. அவன் அட்டையைக்கவனமாகப் புரட்டினான். 'இலவசப் பாடப் புத்தகம்' என்று எழுதப்பட்டிருந்தது. அவன் தொடர்ந்து ஒவ்வொரு ஒற்றையாக 'நோகாமல்' எடுத்து ஒரு பக்கம் ஒதுக்கிக் கொண்டிருந்தான்.

ஆசிரியர் ஒருகணம் எல்லாக்குழுக்களையும் பார்த்துக் கொண்டார். வழக்கம்போல ஒரு புத்தகத்தை வைத்துக் கொண்டு மாணவர்கள் இழுபறிப்பட்டுக் கொண்டிருந்தனர். 'பாடத்தை இனி ஆரம்பிக்க வேண்டியதுதான்' என்று அவர் நினைத்துக்கொண்டார்.

"எங்க....சிவகாமி பதினைந்தாம்பாடத்தை வாசிபாப்பம்."

"கதிர்காமம். இலங்கையில் பிரசித்திபெற்ற திருத்தலங்களில் கதிர்காமமும் ஒன்று. இங்கு கப்புறாளைமார் பூசை செய்வார்கள்."

"கப்புறாளை எண்டா என்ன சேர்?" ஒருத்தி இடைமறித்துக் கேட்டாள்.

"கப்புறாளை எண்டது ஒரு சிங்களச்சொல்லு. சிங்கள ஆக்கள்தான் கதிர்காமத்தில பூசை செய்யினம்"

"அப்ப கதிர்காமம் சிங்களக்கோயிலா சேர்"

"இல்லையடி...... உந்த ஆராய்ச்சியளை பேந்துபாப்பம், இப்ப எழுதி இருக்கிறதவாசி" அவள்தொடர்ந்துவாசித்தாள்.

* *

நேரம் பதினொன்றைக்கடந்திருந்தது. அதே ஆசிரியர் மேசையில் எழுதிக்கொண்டிருந்தார். மாணவர் தம்முள் கதைத்துக்கொண்டும் 'சுரண்டிக்' கொண்டும் இருந்தார்கள். இடையிடையே ஆசிரியரை குழப்பி 'அடிக்கிறார் சேர்' 'குத்துறார்சேர்' என்று ஒருவர் மீதொருவர் குற்றச்சாட்டுக்களை சுமத்திக்கொண்டிருந்தனர்.

அந்தநேரம் அதிபர் வகுப்பறைக்குள் நுழைந்துகொண்டிருந்தார். கையில் ஒரு பத்திரிகையுடன் வந்தவர் ஆசிரியருக்கருகில் வந்துநின்றார்.

"ஆ!......நல்ல விசயம் நீர் ஒராள்தான் பிள்ளையள் வந்ததோ வராலையோ ஒழுங்காக அவங்கட ஒழுங்கின்படி பாடங்களைப் படிப்பிக்கிறனீர். ம்...இந்தாரும் நேற்றையான் பேப்பர்." —அதிபர்

பாடசாலைப் பரிசோதகரின் பார்வைக்காக அன்றாடம் படித்தவற்றை எழுதிவைக்கும் பதிவுப் புத்தகத்தில் குறிப்பெழுதிக்கொண்டிருந்த சிவலிங்கம் ஆசிரியர் அதிபரின் திடீர் வரவால்சற்று தடுமாறினாலும் தன்னைச் சுதாகரித்துக் கொண்டார். அவர், அதிபர் திரும்பியதும் அந்தப் புத்தகத்தை மூடிவிட்டு அதிபர் கொடுத்துச்சென்ற பத்திரிகையை எடுத்து விரித்தார். வழக்கம்போலவே அன்றும் முதன்நாள் பத்திரிகையே வந்திருந்தது. பத்திரிகையைக் கண்டதும் மாணவர்கள் எல்லாவற்றையும் நிறுத்திவிட்டு தமது பழக்கத்தை ஆரம்பித்துவிட்டார்கள். ஆசிரியர் இருந்த மேசையைச்சுற்றி நின்று 'அது இது' என்று கையால் காட்டி கேள்விகளைத் தொடுப்பதே அவர்களது அன்றாடப்பழக்கம்.

பத்திரிகையின் மேல்பக்கத்தில் வரிசையாகப் பல படங்கள் பதிக்கப்பட்டிருந்தன.

"இதென்ன சேர்"—ஒருவன் கேட்டான்.

"இதெல்லாம் உங்களுக்குப் புரியாது பேசாமல் போய் இருங்கோ' என்று முன்னர் பலதடவைகள் அவர் சொல்லிப்பார்த்திருக்கிறார். ஆனால் மாணவரின் பிடிவாதத்தை ஒருபொழுதும் அவரால் மிஞ்ச முடியவில்லை. அதனால் இப்பொழுதெல்லாம் அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு ஏதாவது ஒரு பதிலைச்சொல்லி சமாளித்து விடுவார்.

"இது பெரிய அக்காமாரும் அண்ணைமாரும் எடுத்த ஊர்வலம்"

"ஊர்வலமெண்டா என்ன சேர்?' ஒருத்தி துளைத்தாள்

"ம்......" அவர் சிறிதுநேரம் சிந்தித்துவிட்டு "செத்த சவம் ரோட்டால போகேக்க பின்னால சனம் போறமாதிரிப் போறதைத்தான் ஊர்வலம் என்றது" அவர் ஒரு 'அபாரமான' உதாரணத்தை எடுத்துக்காட்டினார், அவர் கூறிமுடிக்குமுன்னே 'அப்ப ஆர் செத்தது' என்று அதே மாணவி மீண்டும் கேட்டாள்.

"இஞ்ச ஒருத்தரும் சாகேலை இது பல்கலைக்கழகம் எண்டு சொல்லுற பெரிய பள்ளிக்கூடமொண்டு இருக்கு அங்க பெரியபடிப்பு படிக்கிற அண்ணைமாரும் அக்காமாரும் எடுத்த ஊர்வலம்தான் இது. அவை தாங்கள் கடைசியாக எடுத்த சோதனையின்ர மறுமளிய அடுத்த கிழமைகுள் தரவேணுமாம்".

'ஏன் அவங்களுக்கு மறுமளி' ஒருவன் செல்லமாகக்கேட்டான்.

"மறுமளி வந்தால்தான் அவைக்குப்பட்டம் கிடைக்கும் பட்டம்கிடைச்சாத்தான் வெளிநாடு போகலாம். வெளிநாடு போனாத்தான் நல்லா உழைக்கலாம்." ஆசிரியர்மூச்சுவிடாது சொல்லிமுடித்தார்.

அவகளுக்கு அவர்கூறியவற்றில் என்னதான் விழங்கியதோ தெரியாது. அவர்களுடைய மனம் காற்றில் பறக்கும் பட்டத்தை தேடி ஓடிக்கொண்டிருக்கிறது போலும். அவர்கள் அனைவரும் அமைதியாக இருந்தார்கள்.

அவர்களின் அமைதி ஆசிரியருக்கு உள்ளூரச் சந்தோசத்தைக் கொடுத்தது. 'நல்லகாலம் காட்டுக்கு விறகுவெட்டப்போன செல்வாவும்' பெரிமுதலாளியின் மாட்டுப்பட்டியை வயலுக்குக் கொண்டு போன சீலனும் இன்று வரவில்லை, வந்திருந்தால் இன்னும்பல கேள்விகளைக் கேட்டு என்னைத் திக்குமுக்காட வைத்திருப்பார்கள்' ஆசிரியரின் மனம் தனக்குத்தானே சொல்லிக் களிப்புற்றது.

முற்றும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஜனநாயகத்துக்கு வெற்றி ...?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் தொகுதியிலேயே ஜயவர்த்தனவுக்கு ஆகக்கூடிய ஆதரவு கிடைத்திருக்கிறது. இங்கு 82·4% மக்கள் ஆதரவு நல்கி இருந்தார்கள். அதே நேரம் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உடுப்பிட்டி தொகுதியிலேயே ஆகக் குறைந்த ஆதரவு கிடைத்திருக்கிறது. 13·4% மானவர்களே ஜயவர்த்தன பக்கம் சாய்ந்திருக்கிருர்கள்.

ஜே. ஆருக்கு வெற்றியளித்த 103 தொகுதிகளில் 43 தொகுதிகளே முற்ருக கிராமத் தன்மை படைத்தவை. இதன் மூலம் 41·7% மான கிராம வாசிகளின் ஆதரவே கிடைத்திருப்பதை அறியலாம். மிகுதி 58·3% மானவையும் மாநகர, நகர, பட்டினசபைகளை உள்ளடக்கிய பகுதிகளிலிருந்து வந்தவை. இதனால் இந்த ஆதரவு வாக்குகள் 'செல்வாக்கான' வர்களினல் அளிக்கப்பட்டவையாக அமைகின்றன.

தோல்வியடைந்த 57 தொகுதிகளில் 45 தொகுதிகள் கிராமச் சாயல் நிறைந்தவை. இதன் மூலம் தோல்வியடைந்த பகுதிகளில் 78.9% மானவை கிராமப் புறமாகின்றன. இதன்படி ஜயவர்த்தனவை நிராகரித்தவர்களில் 78.9% த்தினர் கிராமத்தவர்.

பட்டினங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற முடிவுகளின்படி — 24 பட்டினங்களில் 5இல் மட்டுமே ஜே.ஆருக்குத் தோல்வி. இவற்[illegible] வவுனியா, மட்டக்களப்பு ஆகிய தமிழ்ப் பகுதிகளும், இரத்தினபுரி, அம்பாந்தோட்டை ஆகிய சுதந்திரகட்சியின் கோட்டைகளாக கருதப்படும் பகுதிகளும் அடங்குகின்றன. இம் முடிவுகளின் படி பட்டினங்களில் 79.2% மானவை ஜே.ஆருக்கு ஆதரவு கொடுத்திருக்கின்றன.

ஆகவே ஐயவர்த்தன வசதி படைத்த, செல்வாக்குள்ள பிரசைகளினல் அரவணைக்கப்பட்டிருக்கிருர். கிராமப்புற மக்களினல் வசதிகுறைந்தோரினல் தூக்கி எறியப் பட்டிருக்கிருர். இந்த இலட்சணத்தில், பாமர மக்களால் நிராகரிக்கப்பட்ட நிலையில், ஜே.ஆரே ஜனதிபதி பதவிக்கு வரமுடியுமென புதிய தேர்தல் முறை கூறியிருக்கிறது. அரசு அமுல்படுத்தியுள்ள இம் முறை மூலம், கிராம வாசிகளின் குரல் வளைகள், செல்வாக்குள்ளவர்களினல் நெரிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குரலொலிகள் கேட்காதவாறு வானெலியும் தொலைக்காட்சியும், பல பத்திரிகைகளும் இன்னும் பல தொடர்பு சாதனங்களும் அரச துதிபாடி வருகின்றன. இவற்றூடாக ஜனநாயகத்துக்கு வெற்றி கிடைத்து விட்டதாக தம்பட்டமடிக்கப் படுகிறது. ஏழை எளியவர்களினல் நிராகரிக்கப்பட்ட ஒருவர் ஜனதிபதி மாளிகைக்குச் செல்வதே ஜனநாயகம் என மறைமுகமாக பிரச்சாரம் செய்யப்படுகிறது.

ஐ.தே.கட்சியின் கிராம மட்ட செல்வாக்கின்மையை இத் தேர்தல் வெளிக்காட்டியிருக்கும் வேளை, தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்புக்களையும் பிரதிபலித்திருக்கிறது. தமிழ் பேசும் மக்களுக்கு பூரண தீர்வு முன்வைக்கப்பட வேண்டுமென அரச தரப்பில் அங்கலாய்ப்புகள் இப்போது தோன்றியிருக்கின்றன. இது தேர்தல் முடிவுகளின் விளைவாலேயே என்பதில் ஐயமில்லை.

வர்க்கரீதியாகப் பார்க்குமிடத்து செல்வாக்குள்ள முதலாளிகளினதும், அவர்களுக்கு விசிறி வீசுபவர்களினதும் தயவில் வந்தவரே இந்த ஜயவர்த்தன. இவரே இன்றைய முதலாளித்துவ பொருளாதார அமைப்பு முறையின் பாதுகாவலர், இந்தக் குணம்சம் படிந்தவரும் அவரது கட்சி உறுப்பினரும் தமிழ் பேசும் மக்களின் கோரிக்கையான ஈழக் கோரிக்கையை எடுத்தெறிந்து விட்டு, பிரச்சனைகளை தீர்த்து வைக்க வரிந்து கட்டி நிற்கிருர்கள். இதனையே ஜனநாயகம் என்றும் ஜனநாயக உரிமைப் பாதுகாப்பென்றும் பறை அடிக்கிருர்கள்.

இவர்கள் இப்பொழுது அடித்துக் கூறி வரும் இன்னெரு புரட்டு நாடு அபிவிருத்திப் பாதையில் போய்க் கொண்டிருப்பது பற்றியது. இந்தப் புரட்டை மத்திய வங்கி அறிக்கை அம்பலமாக்கி இருக்கிறது. இவ்வறிக்கைப் படி, உள்நாட்டு வருமானம் 78 இல் 8.2% அதிகரிப்பைத் தந்திருந்தது. இது 79இல் 6.2% ஆகக் குறைந்தது. தொடர்ந்து குறைந்து போய் 80 இல் 5.5% ஆகவும் தேய்ந்திருக்கிறது அதாவது உள்நாட்டு வருமானம் வீழ்ச்சியடைந்து போயிருக்கிறது. அதே நேரம் வெளிநாட்டுக் கடன்களோ வருடா வருடம் விஷம் போல ஏறியிருக்கின்றன. 77-ம் ஆண்டில் 2849.2 மில்லியன் ரூபாவாக இருந்த இக் கடன் 78 இல் 6084.7 மில்லியன் ரூபாவாக திடீரென ஏறியது. இது 79 இல் 6456 4 மி ரூபாவாகவும் 80 இல் 8714.। மி.ரூபாவாகவும் உயர்ந்திருக்கிறது. இந்தக் கோலத்தைத்தான் அரசு அபிவிருத்திப்பாதை என்கிறது.

இந்தக் கடன்களைச் சாட்டியும், இன்னும் பல வழிகளிலும் வெளிநாட்டவர் இங்கே வாடி கட்டி விட்டார்கள். அமெரிக்கா, இங்கிலாந்து, யப்பான், பிரான்ஸ் மே.ஜேர்மனி, நெதர்லாந்து, சீன, குவைத், கனடா...இவ்வாறு உலக ஏகாதிபத்தியங்களுக்கும் அவர்களது எடுபிடிகளுக்கும் இலங்கை ஒரு தங்குமடமாகி விட்டது. இந்த நாடுகளின் பொரு கள் தான் இங்கு மலிந்து போயிருக்கின்றன. உள்நாட்டு உற்பத்திகள் படுத்துவிட்டன. பாரம்பரிய உற்பத்தித்துறைகள் மரண ஓலம் எழுப்புகின்றன.

இதைத்தான் அபிவிருத்தி என்று அரச தரப்பிலிருந்து வியாக்கியானம் அளக்கப்படுகிறது.

பாமர தொழிலாள, விவசாயிகளால் புறக்கணிக்கப்பட்ட இந்த அரசாங்கத்தாலும், நாட்டை அபிவிருத்தி அடையச் செய்ய முடியாத இந்த அரசாங்கத்தாலும், தமிழ் பேசும் மக்களின் அடிப்படைக் கோரிக்கையை மறுக்கும் இதே அரசாங்கத்தாலும் ஜனநாயகம் பாதுகாக்கப்பட முடியுமா? இதனால் தேர்தல்களில் ஐ.தே.கட்சிக்கு வெற்றி கிடைத்து விட்டதாக அறிவிக்கப்படுவது ஜனநாயகத்துக்கு கிட்டிய வெற்றியாகுமா?

# மூன்று தலைமுறை....!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில்லை. கடன் வழங்கும் எழுத்தர்கள் வழங்கும் கடனில் கால் பகுதியை லஞ்சமாகப் பெற்று விடுகின்றனர். அகதிகள் கூட்டுறவு வங்கியின் பேரில் வழங்கப்படும் இக் காசோலைகளை இலகுவில் மாற்ற முடிவதில்லை. அநேக கிளைகள் இல்லாத இவ் வங்கியின் காசோலைகளை ஏனைய வங்கிகள் ஏற்பதும் இல்லை. இவ்வாறு பெற்ற பணத்தையும் பல்வேறு காரணங்களினுலும் ஒழுங்காகப் பயன்படுத்த முடிவதில்லை. இதனுல் ஏறத்தாழ 80,000 பேருக்கு மேல் பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இன்னும் அனேகர் கொத்தடிமைகளாக கொந்தராத்துக் காரர்களிடம் சிக்க வேண்டியதாகி விட்டது.

வேலை வாய்ப்பு பெற்று வந்தவர்களின் கதை வேறுவிதமானது.

**1. இங்கு பல திட்டங்கள் காகிதங்களிலேயே கிடக்கின்றன.** உதாரணத்திற்கு: சேலத்தையடுத்த சிங்கம் பட்டியில் பாற்பண்ணைத் திட்டம் ஆரம்பிக்கப்படும் என்று நம்பி வந்த மக்கள் தமது கடன் பணத்தில் 6000/— ரூபாவை முதலிட்டனர். இதற்குப் பதிலாக சில பசுக்களும், சிறுநிலத் துண்டும் கிடைக்குமென எதிர் பார்த்தனர். ஆனுல் ஒரு வருடத்திற்கு மேலாகியும் திட்டம் ஆரம்பிக்கப் படாதது டன், முதலிட்ட பணத்திற்கும் எந்தவித உத்தரவாதமும் இல்லாத நிலை வந்திருக்கிறது.

**2. ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் சில பொருளாதார சாத்தியமற்றவை என்பதனுல் மூடப்பட்டுவிட்டன.**

**3. அகதிகளாக வருவோருக்கு வேலை வழங்குவதாகக் கூறி சில தனியார் நிறுவனங்கள் இந்திய அரசிடம் பெருமளவு கடன் உதவி பெறுகின்றன. பின்னர் அகதிகளை பயிற்சியற்றவர்கள் எனக் கூறி விரட்டி விடுகின்றனர்.**

## எதிர்பார்ப்பு:

பன்னெடுங் காலமாக இலங்கையின் அந்நியச் செலாவணிக்காக தமது உழைப்பைத் தந்த மக்களுக்கு இங்கு எந்தவித எதிர்காலமும் இல்லை என்பதை இவற்றல் உணர முடிகிறது. மேலும் 1952 ல் நேரு–கொத்தலாவலை ஒப்பந்தம், 1964 ல் சிறிமா–சாத்திரி ஒப்பந்தம் ஆகிய இரண்டின் ஆயுட்காலமும் முடிந்து விட்ட நிலையிலும் 5 லட்சம் பேருக்கு மேல் நாடற்றவர்களாகவே வாழவேண்டியுள்ளது. 64 ல் ஒப்பந்தம் ஏற்கனவே மூன்றுண்டுகள் நீடிக்கப்பட்டு 31 ஒக்டோபர் 81 உடன் காலவதியாகிவிட்டது. இந்த ஒப்பந்தக் காலத்தில் கூட இலங்கையில் பலருக்கு குடியுரிமை கிடைக்கவில்லை என்பதுடன், குடியுரிமை பெற்றவர்களுக்கும் பாதுகாப்பான நம்பிக்கையான எதிர் காலத்திற்கு உத்தரவாதம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தியாவிலும் வாழ்க்கையில் வசந்தம் வீசவில்லை.

இந்த இடத்தில் நாடற்றவர் பிரச்சனை குறித்து ஜவஹர்லால் நேரு கொண்டிருந்த எண்ணங்களைச் சுட்டிக் காட்டுவது பொருத்தமானதே.

1948 ஜூன் 9 திகதிய கடிதமொன்றில் "தாங்கள் அனுப்பியுள்ள மசோதாவின் (இலங்கை – இந்தியர் குடியுரிமை பற்றிய மசோதா) சரத்துக்கள் இந்தியர்களாலும் சரி, இலங்கை வாழ் இந்தியர்களாலும் சரி ஏற்கத் தக்கதல்ல என்பதை நான் தெளிவாகத் தெரிவிக்காவிட்டால் என் கடமையில் தவறியவனுவேன். என்று குறிப்பிட்டார். பின்னர் 1948 செப்டம்பர் 8 ல் (1) பதிவுப் பிரசைக்குரிய யோக்கிய தாம்சங்களை வரையறுக்கும் படியும்

(2) வருங்காலத்தில் இலங்கைக் குடிகளாகும் இந்தியர்களுக்கு நிர்வாக ரீதியிலோ, அல்லது சட்டரீதியாகவோ எவ்விதமான பாகுபாடும் காண்பிக்கப் படமாட்டாது என்பதற்கான உத்தரவாதம் என்பவற்றையும் வலியுறுத்தி ஒரு கடிதம் எழுதினுர். இதன் பின் அக்டோபர் 4ல் இலங்கைக்கு எழுதிய கடிததத்தில் "செப்டம்பர் 8ம் திகதிக கடிதத்தில் குறிப்பிட்ட யோசனைகளுக்கு நீங்கள் இணங்க முடியாமலிருப்பது குறித்து வருந்துவதாக" குறிப்பிட்டுள்ளார்.

எனவே இந்திய அரசு நாடற்றவர் பிரச்சனை குறித்து, நேரு காட்டிய இதே உறுதியான முடிவைப் பின்பற்றி அவர்கள் இலங்கைக் குடியுரிமை பெறவும், இலங்கையில் அவர்களது பாதுகாப்பான நல்வாழ்விற்கு உத்தரவாதம் கோருவதையுமே இந்த மக்கள் விருமபி ஏற்பர் என எதிர்பார்க்கலாம்.

T. V. S. Hari
- News strek
T. N. Gopalan
- Indian Express
தேனுரான்
- மக்கள் மறுவாழ்வு

கட்டுரைகளைத் தழுவியது.

# பாலஸ்தீனர்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கணைகளினுல் பாதிப்புற்றிருந்தது இதனுல் இந்த ஏவுகணைகளை அழித்தகற்ற வேண்டியதேவை இஸ்ரேலுக்கு முன்னரே ஏற்பட்டிருந்தது.

2. இஸ்ரேல் தனது அயல் நாடுகளில் ஒன்றன எகிப்தை, 78ல் செய்துகொண்ட 'கேம்ப்டேவிட்' ஒப்பந்தத்தின் மூலம் தனக்கு சாதகமாக நடக்கச் செய்திருந்தது. இந்தவரிசையில் லெபனனையும் தனக்குச் சார்பாக இயங்கவைக்க அங்கு தனக்குச்சார்பான ஆட்சியை நிலை நிறுத்த வேண்டிய தேவை இஸ்ரேலியருக்கு ஏற்பட்டிருந்தது. இதனுலேயே தனக்குச்சார்பான வலது சாரி கிறிஸ்தவ படையின் தலைவர் பசீர் ஜமயலை ஜனதிபதியாக்க முனைந்தது.

3. பாலஸ்தீன மக்களின் ஆதரவில் இயங்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை சிதறடித்து நிர்மூலமாக்குவதன் மூலம் பாலஸ்தீனம் பற்றிய பேச்சையே சுட்டுப் பொசுக்கி விட்டு தனக்கு பூரண நிம்மதியை தேடிக் கொள்ள நினைத்தது. இதனுலேயே பெரும்படைகளால் பாலஸ்தீன விடுதலை இயக்கம் முகாமிட்டிருந்தந்த பெய்ரூட் பகுதியை முற்றுகையிட்டு பலாத்காரத்தை பிரயோகித்திருந்தமை எடுத்துக்காட்டுகிறது எனலாம்.

4. நிக்கரகுவா, எல்சல்வடோர் போன்ற நாடுகளில் மக்களின் விடுதலைக்காக புரட்சியாளர்களுக்கு பாலஸ்தீன விடுதலை இயக்கம் பயிற்சி அளித்திருப்பதை தாம் உறுதிசெய்திருப்பதாக கூறிய அமரிக்க ஜனதிபதி றீகன், வறிய மக்களின் விடுதலையைத் தடுப்பதற்காக பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை நிர்மூலமாக்க கங்கணம் கட்டுவதில் வியப்பொன்றுமில்லை. இஸ்ரேலைப் பயன்படுத்தி அமெரிக்கா தனதுவேலையை முடிக்க முனைந்திருப்பதையும் பெய்ரூட் படுகொலைகள் எடுத்துக்காட்டுகின்றன.

இத்தனை சதிவேலைகளின் பின்பும் பாலஸ்தீனர் அடிபணிந்து போயிருக்கிருர்களா? இத்தகைய இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் இன்று நேற்றுத்தான் பாலஸ்தீனர் மீது ஏவிவிடப் பட்டதொன்றல்ல. அவர்களின் வரலாறே இதை உறுதிப்படுத்துகிறது.

இம்முறை பாலஸ்தீனரின் மீது தாக்குதல் தொடுத்த இஸ்ரேலிய இராணுவத்தினன் ஒருவன் 'நியூஸ் வீக்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் 'அவர்கள் சிறந்த வீரர்கள்' என்று கூறியதும் முன்னுள் இஸ்ரேலியபிரதமர் ராபின் 'பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை முற்ருக அழிக்க முடியாது' எனக்கூறிய கூற்றும் பாலஸ்தீனரின் சுதந்திர உணர்வுடன் கூடியவீரத்திற்கு போதிய சான்றுகளாக அமைகின்றன.

# ரஷ்யப் புரட்சி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

**யில் ஒரு வகையாகும். அது படைகளின் குறிப்பிட்டநிலையையும், குறிப்பிட்ட சூழ்நிலைகளையும் பொறுத்து. போராட்டத்தின் குறிப்பிட்ட தருணத்தில் முற்றிலும் பொருத்தமாக இருப்பது மட்டுமன்றி இன்றியமையாததாகவும் கூட இருக்கலாம். ஆனுல் இவர்களது கூற்றின் சாரம் என்ன? போராட்டத்தின் முழு ஏற்பாட்டுடன் நெருக்கமாகப் பின்னிப்பிணைத்த**

(தொடர்ச்சி 2–ம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலகச் செய்திகள்

## அமெரிக்க நகரம் டெட்ரெயிட்டில் மக்கள் பட்டினியால் வாடுகின்றனர்

அமெரிக்காவின் மோட்டார் கார் உற்பத்தி நகரமான டெட்ரெயிட்டில் பட்டினி நெருக்கடி காரணமாக அவசர கால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

நகரில் வேலையற்றோரினதும், பசியால் வாடுவோர்களினதும் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக நகரமேயர் யங் குறிப்பிட்டிருந்தார்.

டெட்ரெயிட் நகரில் உள்ள மொத்தம் 12 லட்சம் தொழிலாளர்களில் சுமார் நாலில் ஒரு பகுதியினர் வேலையற்று இருக்கின்றனர். அவர்களில் பலர் மோட்டார் கார் தொழிற்சாலைத் தொழிலாளர்கள். இரண்டுவருட காலமாக இந்தத் தொழிற்சாலைகள் இயங்காமல் இருக்கின்றன.

நகரின் மூன்றில் ஒரு பகுதியினருக்கு போஷாக்குணவு கிடைப்பதில்லையென நகரமேயர் யங் கூறியிருக்கிறார்.

## பாகிஸ்தான்-இந்தியா உறவுப் பேச்சுவார்த்தை தொடர்கிறது

பாகிஸ்தான், இந்தியாவிலிருந்து பிரிந்தபின், இருநாடுகளுக்குமிடையில் மூன்று முறை யுத்தங்கள் நடந்தன. இந்த முரண்பாடுகளை நீக்கும் முகமாக இருநாடுகளுக்கு மிடையிலான பேச்சுவார்த்தை கடந்த ஜனவரிமாதம் ஆரம்பமாகின. பேச்சுவார்த்தைகளில் தடங்கல் ஏற்பட்டது.

கடந்த நவம்பர் மாதம் பாகிஸ்தான் ஜனாதிபதி பாரதப் பிரதமர் இந்திராகாந்தியுடன் நான்கு மணி நேரம் பேச்சுவார்த்தையை மேற்கொண்டார். இதன்பின் இரு நாடுகளுக்குமிடையே உறவு நிலை ஏற்படத் தொடங்கியுள்ளது.

பேச்சுவார்த்தைகளின் போது ஆக்கிரமிப்பு தவிர்ப்பு சமாதான உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்வது, கூட்டுக்குழு ஒன்றை அமைப்பது ஆகிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

டிசெம்பர் மாத நடுப்பகுதியில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் இந்தியக்குழுவிற்கு வெளியுறவு அமைச்சுச் செயலாளர் கிருஷ்ணன் ரஸ்கோத்ராவும், பாகிஸ்தானியக் குழுவிற்கும் அதன் வெளியுறவு அமைச்சுச்செயலாளர் நியாஸ் நாயக்கும் தலைமை வகித்தார்கள்.

இப்பேச்சுவார்த்தைகளின் மூலம் 10 வருடங்களின் பின்னர் பாகிஸ்தானுக்கு பொது நல நாடுகள் அமைப்பில் இடம் கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பாகிஸ்தானும் இந்தியாவும் இன்னமும் பெரும் கருத்து முரண்பாடுகளைக் கொண்டிருக்கின்றன என பாகிஸ்தானிய குழுத்தலைவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

வெளிநாட்டு இராணுவத் தளங்கள் தொடர்பான பிரச்சனைகளும் இந்த முரண்பாடுகளில் அடங்குமென அவர் கூறியுள்ளார்.

## எகிப்தில் 299 பேருக்கு மரண தண்டனை

எகிப்திய அரசைக் கவிழ்க்க சதி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் சுமார் 300 எகிப்திய தீவிரவாதிகளுக்கு எதிராக எகிப்தில் நீதிமன்ற விசாரணை ஆரம்பமானது.

குற்றம் சுமத்தப்பட்டவர்களில் 299 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்படவேண்டுமென்றும், மூன்று பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கவேண்டுமென்றும் அரசதரப்பில் கோரப்பட்டிருக்கிறது.

குற்றம் சுமத்தப்பட்டவர்கள் அத்தனை பேரும் தடை செய்யப்பட்ட 'ஜிஹாத்' (புனிதப் போர்) இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்பட்டிருக்கிறது.

இந்த இயக்கத்தைச்சேர்ந்த ஐவருக்கு கடந்த ஏப்ரல்மாதம் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

## இஸ்ரேலில் வேலைநிறுத்தம்

இஸ்ரேலில் நாலு லட்சம் அரசாங்கத் தொழிலாளர் டிசம்பர் முற்பகுதியில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இஸ்ரேலிய ராஜதந்திரிகள், வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் ஆகியோர் முதல் தடவையாக இவ்வேலை நிறுத்தத்தை ஆரம்பித்திருக்கின்றனர்.

பணவீக்கத்துக்குப் புறம்பாக ஆறு அல்லது எட்டு சதவீத சம்பளவுயர்வு, கூடுதல் வேதனம், புதிய தொழில் உடன்படிக்கை ஆகிய கோரிக்கைகளை தொழிற்சங்கங்கள் முன்வைத்துள்ளன.

வேலை நிறுத்தத்தினல் அரசாங்க அலுவலகங்கள், பாடசாலைகள், மருத்துவ மனைகள், வைத்திய சிகிச்சை நிலையங்கள், வானொலி நிலையம், ஒளிபரப்பு நிலையம்ஆகியன பாதிக்கப்பட்டன.

## ஆர்ஜென்டீனு அரசுமீது மக்கள் அதிருப்தி

ஆர்ஜென்டீனு இராணுவ அரசுக்கு எதிராக டிசெம்பர் நடுப்பகுதியில் பிரமாண்டமான எதிர்ப்பு ஊர்வலம் ஒன்று நடாத்தப்பட்டது.

ஊர்வலம் மத்திய புவனஸ் அயர்ஸ் ஊடாகச்சென்றது, ஆர்ஜென்டீனுவின் ஆறரை வருடகால இராணுவ ஆட்சிக் காலத்தில் அரசுக்கு எதிராக நடைபெற்ற முதலாவது மிகப் பெரிய ஆர்ப்பாட்ட ஊர்வலம் இதுவாகும்.

இராணுவ ஆட்சிக்கு முடிவு காணவேண்டும், நாட்டில் ஜனநாயகத்தை விரைவில் ஏற்படுத்த வேண்டும், போன்ற கோரிக்கைகளை முன் வைத்தே ஊர்வலம் நடத்தப்பட்டது.

ஊர்வலத்தின் மீது பொலீஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர்.

## சோவியத் அதிபர் பிரஷ்நேவ் காலமானுர்

சோவியத் அதிபர் லியோனித் பிரஷ்நேவ் நவ- 10ந் திகதி காலமானுர். இவர் 1906-ம் ஆண்டு 19-ம் திகதி (உருக்குத்தொழிலாளர் குடும்பத்தில்) பிறந்தார். இவர் சிறு வயதில் உருக்குத்தொழிலில் தந்தையார், பாட்டனருக்கு உதவியதோடு, பொறியியலாளராகவும் பட்டம் பெற்றுர்.

இளம் கம்யூனிஸ்டு லீக்கில் சேர்ந்து ரஷ்யத் தொழிலாளரின் கஷ்டமான வாழ்க்கைமுறைகளில் வளர்ந்த பிரஷ்நேவ் 25ஆவது வயதில் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்த்துக்கொள்ளப் பட்டார்.

பாசிஸ துருப்புக்கள் சோவியத்யூனியன்மீது தாக்குதல் நடத்தியபோது இவர் இராணுவத்தில் சேர்ந்து யுத்தம் முடியும்வரை தொடர்ந்து யுத்த முனையில் பணிபுரிந்தார்.

1952-ம்ஆண்டுகம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியகுழுவிற்குத் தெரிவானுர். பின்னர் கம்யூனிஸ்ட் மத்தியகுழுவின் செயலாளராகவும் தலைமைத்துவ அமைப்பின் உறுப்பினராகவும் அவர்பணியாற்றினுர். 1964ம் ஆண்டளவில் கம்யூனிஸ்ட் மத்தியகுழு பொதுச் செயலாளராகத்தெரிவுசெய்யப்பட்டார்.

1973-ல் சர்வதேச லெனின் சமாதானப் பரிசும் 1976-ம் ஆண்டளவில் சோவியத்யூனியனின் அதியுயர் இராணுவ அந்தஸ்தான மார்ஷல் பட்டமும் அவருக்களிக்கப்பட்டது.

சமாதானத்தையும் முழுமனித சமுதாயத்தின் முன்னேற்றத்தையும் நாடிநிற்போருக்கு பிரஷ்னேவின் இழப்பு பேரிழப்பாகும்.



அண்மையில் மதகுருமாரும், விரிவுரையாளரொருவரும், அவரது துணைவியாரும் கைது செய்யப்பட்ட விவகாரம் ஒரு பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

இந்தப்பரபரப்பில் பலவாறுன கோசங்கள் எழும்பியிருந்தன. "மக்களே பார்த்துக்கொண்டிருந்தது போதும் புறப்படுங்கள் போராட" என்று சுவரில் ஒட்டி நின்று சிலர் கோசித்திருந்தார்கள். "இதோ குருமாரிலும் கைவைத்து விட்டார்கள்; விரிவுரையாளரிலும் தாவி விட்டார்கள். இனிமேல் ஒரு கணமேனும் தாமதித்தலாகாது; எல்லோரும் புறப்படுங்கள்" என்று வேறு சிலர் வேண்டிக்கொண்டார்கள். "வேளை வந்து விட்டது; மக்கள் புறப்பட்டு விட்டார்கள்; எல்லோரும் குதியுங்கள் களத்தில்" என்று இன்னும் சிலர் கூப்பாடு போட்டார்கள். இந்தக் கூப்பாடுகள் எல்லாம், மக்கள் போராடப் பின்னிற்கிறுர்கள்; அவர்கள் தூங்கிக் கொண்டிருக்கிறுர்கள்; அவர்களை எப்படியாவது இழுத்து வந்து இயங்கவைக்கவேண்டுமென்ற எண்ணத்திலிருந்து உதித்தவையாகவே படுகின்றன. இதனுல் இந்தக்கோசக் காரருக்கு மக்கள் சக்திமீது அவநம்பிக்கை இருப்பதாகவே நினைக்கத் தோன்றுகிறது.

இவர்களில் சிலரைப்பார்த்து மக்கள் நீங்கள் யார் என்று கேட்கிறுர்கள் அதற்கு இவர்கள் எங்களை 'ஊகித்து' கொள்ளுங்கள் என்கிறுர்கள்.

இவை ஒருபுறமிருக்க, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கும்படி அரசை நெருக்கிக் கேட்கவேண்டிய புதிய சூழ்நிலைக்கு தமிழ் அரசியல் தலைமை தள்ளப்பட்டிருக்கிறது.

ஆனுல் ஒன்று. இதற்குமுன்னர் பல இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டபோதும், கைது செய்யப்பட்டபோதும் இவ்வளவு தூரம் எழும்பாத எதிர்ப்பு, குறிப்பாக குருமார் கைது செய்யப்பட்டதும் பரந்தளவில் [illegible] தைக் கொடுக்கும் விடயமல்ல. குருமாருக்கும் மக்களுக்கு மிடையிலான மதரீதியிலான தொடர்பினுல் உருவாகி இருந்த ஒருவகை நம்பிக்கையும், (மத) நிறுவன அமைப்பும் இருந்ததனுலேயே மக்கள் துணிச்சலுடன் முன்வந்து எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்க வாய்ப்பாக இருந்தது. இந்த நிறுவனங்களூடாக தமது நம்பிக்கைக்குரிய குருமாரைக் காக்க மக்கள் குரல்கொடுக்க முன்வந்தபோது இதர குழுக்களும் தம்மை இணைத்துக் கொண்டன.

ஆயினும் எதிர்ப்பு நடவடிக்கைகளின் போது உற்சாகமுடன் நடாத்தப்பட்ட ஊர்வலங்களும், உண்ணு விரதங்களும், வவுனியாவில் மௌன ஊர்வலத்துக்கு பொலிசார் தடியடி கொடுத்தபோது, கண்டன அறிக்கைகளாயும் கண்டன சுவரொட்டிகளாயும் குறுகி இப்போது அமைதி காத்து நிற்கின்றன.

மக்களை சோம்பேறிகளாக, தூங்கிப்போய் இருப்பவர்களாக நினைத்து கூவி அழைத்தவர்கள் இப்போது மௌனம் சாதிக்கிறுர்கள். 'பயங்கரவாத தடைச் சட்டத்தை வாபஸ் வாங்கு' 'குருமாரை விடுதலை செய்' என்றெல்லாம் கோரிக்கை விட்டவர்கள், தமது கோரிக்கைகளில் பிடிவாதமாக நின்று இறுதிவரை போராட சக்தியற்றுப் போயிருக்கிறுர்கள்.

எப்போதோ போராட்டத்துக்குத் தயாராகிவிட்ட மக்கள் இப்போது எதிர்பார்த்து நிற்பது தமது உண்மையான பிரச்சினைகளை முன்வைத்து, இலட்சியங்களை ஈடேற்றக் கூடியவர்களையும், தமது நம்பிக்கைக் குரியவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு திடமான அமைப்பையே! அது வெளிப்படும் வரை ஒப்பீட்டு ரீதியில் முன்னணியில் நிற்கும். ஒரு அணியையே அவர்கள் சார்ந்திருப்பார்கள்.

உங்கள் ஆக்கங்களை 'தர்க்கீகம்' வரவேற்கின்ற, அதேவேளையில் தர்க்கீகத்தை நீங்கள் திறனுய்வு செய்யலாம். அதன் மூலம் 'தர்க்கீகம்' மேலும் தன்னை செழுமைப்படுத்திக்கொள்ளும். உங்கள் ஆக்கங்கள் எங்கள் சமூக நிலையை எடுத்துரைப்பவையாகவும் சமூக மாற்றத்தைக் கோருபவையாகவும் அமையட்டும்.

**'தர்க்கீகம்'**

த. பெ. எண். 103
யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை ஊரெழு கிழக்கு எஸ். விக்கனேஸ்வரன் அவர்களால் யாழ்ப்பாணம் பிரதானவீதி 360-இலக்கத்திலுள்ள புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்